# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021-2022

### மானியக் கோரிக்கை எண் – 31


## த.மனோ தங்கராஜ்
தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2021

**தகவல் தொழில்நுட்பவியல் துறை**

**மானியக் கோரிக்கை எண்.31**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2021 – 2022**

**பொருளடக்கம்**


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| I | முன்னுரை | 1–8 |
| II | **தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)** | 9–47 |
| 1. | முன்னுரை | 9 |
| 2. | செயல்பாடுகள் | 10–47 |
| 2.1 | தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் வளர்ச்சி | 10–14 |
| 2.2 | எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs) | 15–32 |
| 2.2.1 | எல்கோசெஸ் (ELCOSEZ) – சோழிங்கநல்லூர், சென்னை | 15–17 |
| 2.2.2 | எல்கோசெஸ் (ELCOSEZ) – விளாங்குறிச்சி, கோயம்புத்தூர் | 17–19 |
| 2.2.3 | எல்கோசெஸ் (ELCOSEZ) – இலந்தைக்குளம், மதுரை | 19–21 |

| | | |
|---|---|---|
| 2.2.4 | எல்கோசெஸ் (ELCOSEZ) – வடபழஞ்சி, மதுரை | 22–24 |
| 2.2.5 | எல்கோசெஸ் (ELCOSEZ) – நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி | 24–26 |
| 2.2.6 | எல்கோசெஸ் (ELCOSEZ) – கங்கைகொண்டான், திருநெல்வேலி | 26–28 |
| 2.2.7 | எல்கோசெஸ் (ELCOSEZ) – ஜாகீர் அம்மாபாளையம், சேலம் | 28–31 |
| 2.2.8 | எல்கோசெஸ் (ELCOSEZ) – விஸ்வநாதபுரம், ஓசூர் | 31–32 |
| 2.3 | தொழில்முனைவோர் மையம் (Startup Warehouse) | 32 |
| 2.4 | ஃபின்ப்ளூ – நிதி தொழில்நுட்ப உயர்தனிச் சிறப்பு மையம் (Centre of Excellence in FinTech) | 32–33 |
| 2.5 | தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு | 33–41 |
| 2.5.1 | வலையமைப்பு சேவைகள் | 34–37 |
| 2.5.1.1 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) | 34–35 |

| | | |
|---|---|---|
| 2.5.1.1.1 | தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம் | 35–36 |
| 2.5.1.2 | பிற இணைப்பு சேவைகள் | 36–37 |
| 2.5.1.2.1 | MPLS VPN இணைப்பு | 36 |
| 2.5.1.2.2 | இணையக் குத்தகை இணைப்பு | 36 |
| 2.5.1.2.3 | VPNoBB இணைப்பு | 36–37 |
| 2.5.2 | பதிவேற்றம் மற்றும் தொடர்புடைய சேவைகள் | 37–41 |
| 2.5.2.1 | தமிழ்நாடு மாநில தரவு மையம் – 1 (TNSDC – 1) | 37–38 |
| 2.5.2.2 | தமிழ்நாடு மாநில தரவு மையம் – 2 (TNSDC – 2 ) | 38 |
| 2.5.2.3 | தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC) | 39 |
| 2.5.2.4 | தமிழ் மேகம் – தமிழ்நாடு மேகக் கணினிய சேவைகள் | 39–40 |
| 2.5.3 | மின்னணு பாதுகாப்பு | 40–41 |

| | | |
|---|---|---|
| 2.5.3.1 | தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு | 40–41 |
| 2.5.3.2 | தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA –TN) | 41 |
| 2.6 | அரசின் வெளிப்படை தரவுத்தளம் | 42 |
| 2.7 | ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs) | 42–43 |
| 2.8 | திறன் மேம்பாடு | 43–44 |
| 2.9 | வலையமைப்பு சேவைகள் | 44–45 |
| 2.10 | கொள்முதல் சேவைகள் | 45–47 |
| III | **மின் ஆளுமை இயக்குநரகம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை** | **48–100** |
| 1. | முன்னுரை | 48 |
| 2. | குறிக்கோள்கள் | 48–50 |
| 3. | தொழில்நுட்ப அமைப்புகள் | 50–54 |
| 3.1 | தகவல் தொழில்நுட்ப பணிநிலைப் பிரிவு (IT Cadre) | 50 |

| | | |
|---|---|---|
| 3.2 | மாநில மின்–குறிக்கோள் குழு (SeMT) | 50–51 |
| 3.3 | வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையம் – (Centre of Excellence in Emerging Technologies–CEET) | 51–54 |
| 3.4 | மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (District e–Governance Societies) | 54 |
| 4. | தரவுகள் அடிப்படையிலான நிர்வாகம் | 55–57 |
| 4.1 | முதலமைச்சர் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு உதவும் அமைப்பு | 55 |
| 4.2 | மாநில குடும்ப தகவல் தொகுப்பு (SFDB) | 56 |
| 4.3 | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS) | 57 |
| 5. | நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) | 57–59 |
| 6. | பொதுமக்களுக்கான அரசு சேவைகள் | 59–81 |

| | | |
|---|---|---|
| 6.1 | பொது சேவை மையங்கள் (இ-சேவை) | 59-79 |
| 6.2 | ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் | 79-81 |
| 7. | உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) மற்றும் முதலமைச்சர் உதவி எண் (1100) | 82-83 |
| 8. | முனைப்பான ஆளுகை | 83-84 |
| 8.1 | முனைப்பான சேவை வழங்கல் | 83-84 |
| 9. | வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் | 84-89 |
| 9.1 | இ-பார்வை (e-Paarvai) : செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) அடிப்படையிலான கண்புரை கண்டறிதல் அமைப்பு (AI based Cataract Detection System) | 84 |
| 9.2 | முக அடையாளம் கண்டறியும் முறை - Face Recognition System (FRS) | 85-86 |
| 9.3 | தமிழ்நாடு நம்பிக்கை இணைய பின்புலக் கட்டமைப்பு | 87-88 |

| | | |
|---|---|---|
| 9.4 | குறைந்த அளவில் காகித பயன்பாட்டிற்கான மின்னாளுமை உட்கட்டமைப்பு | 88–89 |
| 9.4.1 | தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான மின்னஞ்சல் கணக்குகள் | 88 |
| 9.4.2 | மின்–அலுவலகம் | 88–89 |
| 10. | திறன் மேம்பாடு | 89 |
| 11. | நமது அரசு (MyGov) | 90 |
| 12. | அரசு இணையதளங்களுக்கான தரநிர்ணயம் | 90 |
| 13. | தேர்வு ஒரு சேவையாக (EaaS) | 91 |
| 14. | தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு தணிக்கை | 92 |
| 15. | பல்வேறு அரசு துறைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருட்கள் | 92–100 |

| | | |
|---|---|---|
| IV | **தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்** | 101–104 |
| 1. | முன்னுரை | 101 |
| 2. | நோக்கங்கள் | 101–102 |
| 3. | அரசு இ–சேவை மையங்கள் | 102–103 |
| 4. | ஆதார் நிரந்தர பதிவு மையங்கள் | 104 |
| V | **தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)** | 105–108 |
| 1. | பாரத்நெட் | 106–107 |
| 2. | தமிழ்நெட் | 107 |
| 3. | பாரத்நெட் திட்டத்தின் பயன்கள் | 108 |
| VI | **தமிழ் இணையக் கல்விக்கழகம்** | 109–120 |
| 1. | முன்னுரை | 109 |
| 2. | நோக்கங்கள் | 110 |
| 3. | கல்வித் திட்டங்கள் | 110–113 |
| 4. | தமிழ் – மின்நூலகம் | 113–114 |

| | | |
|---|---|---|
| 5. | தமிழர் தகவலாற்றுப்படை | 114–115 |
| 6. | இ–ஆசிரியர் திட்டம் | 115 |
| 7. | தமிழ் கணினியம் | 116 |
| 8. | தமிழ் ஒருங்குறி | 116–117 |
| 9. | பரப்புரைப் பணிகள் | 117–118 |
| 9.1 | கணித்தமிழ்ப் பேரவை | 117 |
| 9.2 | கான் கல்விக் கழகக் கல்விக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்தல் | 117–118 |
| 10. | மாதாந்திரச் தொடர்ச் சொற்பொழிவு | 118 |
| 11. | மாநாடுகள் மற்றும் இணையக் கருத்தரங்குகள் | 119–120 |
| 11.1 | ஆசிரியர் திறன் மேம்பாட்டு இணையவழிப் பயிலரங்கம் | 119 |
| 11.2 | பன்னாட்டு இணையவழிப் பயிலரங்கம் – தமிழ் மொழியில் தொழில்நுட்பங்கள் | 119 |
| 11.3 | பேச்சுப் போட்டி | 120 |
| 11.4 | கணினித் தமிழ் – பன்னாட்டு மாநாடு | 120 |

| | | |
|---|---|---|
| VII | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)** | 121–128 |
| 1. | முன்னுரை | 121–122 |
| 2. | தமிழ்நாடு ஐ.சி.டி அகாடமியின் செயல்பாடுகள் | 122–128 |
| 2.1 | ஆசிரியர் மேம்பாடு | 122 |
| 2.2 | திறன் மேம்பாடு | 123 |
| 2.3 | தொழில் முனைவோர் மேம்பாடு | 123 |
| 2.4 | இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் | 123–124 |
| 2.5 | ஆய்விதழ்கள் | 124–126 |
| 2.6 | டிஜிட்டல் அதிகாரமளித்தல் | 126 |
| 2.7 | குளோபல் டெக்னாலஜி ஃபோரம் | 127–128 |
| 2.8 | ஸ்கை கேம்பஸ் – கல்வியாளர்களுக்கான டிஜிட்டல் அறிவு இணையவழிக் கருத்தரங்குகள் | 128 |
| VIII | **முடிவுரை** | **129–130** |

## அத்தியாயம் – I

### 1. முன்னுரை

மென்பொருள் துறையில் சக்திவாய்ந்த மையமாகத் தமிழ்நாடு வேகமாக உருவாகி வருகிறது. உள்ளார்ந்த வாய்ப்புகளைக் கொண்டிருப்பதால் மென்பொருள் சேவையை அளிப்பதிலும், மென்பொருள் ஏற்றுமதியிலும் முன்னணியில் உள்ளது. துடிப்பான கல்விச் சூழல் அமைப்பு, சிறந்த தொழில்நுட்பத் திறன்கொண்ட மனிதவளம், உகந்த அமைவிடம், வலுவான இணைப்பு வசதி மற்றும் வெற்றிகரமான உற்பத்திச் சூழல் போன்றவை இதில் அடங்கும். மிகப்பெரிய மனிதவளத்தைக் கொண்டிருப்பது மற்றும் அதனைத் தக்கவைக்கும் திறன், குறைந்த செலவினம் ஆகியவை தமிழகத்தின் போட்டித் திறனை மேலும் உயர்த்தியுள்ளன. கோவிட் – 19 பெருந்தொற்று காரணமாக ஊரடங்கு அறிவிக்கப்பட்டதால் பொருளாதார டிஜிட்டல் மயமாக்கம் மற்றும் டிஜிட்டல்

பரிவர்த்தனைகளின் பயன்பாடுகள் குறுகிய காலத்தில் அதிகரித்துள்ளன. இத்தகைய வளர்ச்சி மாநிலத்திற்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்து இங்கே
திலக வாணுதலார் தங்கள் பாரத தேசம் ஓங்க
உழைத்திடல் வேண்டுமாம்.

–மகாகவி பாரதியார்

இதன் பொருள் "நான்கு திசைகளில் உள்ள நாடுகளுக்கும் சென்று புதுமைகளைக் கொணர்ந்து, நாட்டின் வளர்ச்சிக்காக நாம் உழைக்க வேண்டும்" என்பதே.

பெண்களுக்காக பாரதியார் இயற்றிய இக்கவிதை, நாம் வளர்ச்சி அடையவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், வளர்ந்து வரும் மற்றும் ஆழ்நிலைத் தொழில்நுட்பங்களில் (Emerging and Deep Technologies) புலமை பெற்று, பொருளாதார வளர்ச்சியையும், வேலைவாய்ப்புகளையும் உருவாக்க வேண்டிய சூழலுக்குப் பொருத்தமான ஒன்றாக

விளங்குகிறது. செயற்கை நுண்ணறிவு (AI), தரவுப் பகுப்பாய்வு (Data Analytics), இயற்கை மொழிச் செயலாக்கம் (NLP), செறிவூட்டப்பட்ட உண்மை (AR) / மெய்நிகர் உண்மை (VR), ஆளில்லா விமானத் தொழில்நுட்பம் (Drone Technology), நம்பிக்கை இணையம் (Blockchain), 5ஜி/6ஜி இணைப்புகள், இணையப் பாதுகாப்பு (Cyber Security), குவாண்டம் கணினியம் (Quantum Computing), தானியங்கு வாகனங்கள் (Automated Vehicles), குறியாக்கவியல் (Cryptography), பொருட்களின் இணையம் (Internet of Things) போன்ற ஆழ்நிலைத் தொழில்நுட்பங்களின் வளர்ச்சியுடன் நாம் பயணிப்பதன் மூலம், அடுத்த பத்தாண்டுகளில் நாட்டின் வளர்ச்சியை தீர்மானித்து, அதிக அனுகூலம் பெற்றிடவும், பொருளாதார வளம் மற்றும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்க இயலும்.

செயற்கை நுண்ணறிவு, நம்பிக்கை இணையம் மற்றும் தரவுப் பகுப்பாய்வு மற்றும் பொருட்களின் இணையம் ஆகியவற்றில் கவனம் செலுத்த,

"உயர்தனிச் சிறப்பு மையம்" (centre of excellence) அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையம் இத்தொழில்நுட்பங்களை முக்கியத் துறைகளான மருத்துவம், விவசாயம் மற்றும் கல்வி போன்றவற்றில் பயன்படுத்த உதவி வருகிறது. "இ–பார்வை" எனப்படும் செயற்கை நுண்ணறிவு மூலம் கண்புரையைக் கண்டறியும் கைபேசிச் செயலி அதன் துல்லிய அளவீட்டிற்காக சமீபத்தில் "நாஸ்காம்" (NASSCOM) நிறுவனத்தின் விருதினைப் பெற்றுள்ளது. மாநிலத்தில் அரசுத் துறைகளின் அதிமுக்கிய மென்பொருள் பயன்பாடுகளுக்கு மாறாத மற்றும் சரிபார்க்கக்கூடிய தீர்வினை வழங்கிடும் வகையில் அமைந்த "நம்பிக்கை இணையம்" எனும் தளம் உருவாக்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் பொருளாதாரம் வளர்ந்துவரும் வேளையில், புதிய தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பெருக்கத்தின் காரணமாக சேவைகள் துறையும் வேகமாக வளர்ந்து வருகிறது. இதற்கு தகவல் தொழில்நுட்பம் முக்கிய உந்து சக்தியாகத் திகழும்.

மருத்துவம், சுற்றுலா, கல்வி, பொறியியல் துறை, தகவல் தொடர்பு, போக்குவரத்து, வங்கியியல் மற்றும் நிதித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தைப் புகுத்துவதன் வாயிலாக ஏற்படும் கண்டுபிடிப்புகளால், தமிழ்நாட்டில் தொழில் முனைவோருக்கான சூழலும் வேகமாக வளர்ந்து வருகிறது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தொழில் முனைவோருக்கான சூழலை மேம்படுத்தும் பணிகளில் அரசு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது. இது அனைத்து சமூகங்களையும் உள்ளடக்கிய, விரிவான வளர்ச்சியை ஊக்குவிப்பதுடன், தேசிய அளவில் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பத் துறையில் மாநிலம் முன்னிலை அடையவும் உதவும். தமிழ்நாடு திறன் வாய்ந்த மனிதவள ஆதாரத்தைக் கொண்டுள்ளது. மேலும், திறன்மிகு மனிதவளத்தை ஆதாரமாகக் கொண்ட "உலகளாவிய திறன் மையங்கள் (GCCs)" அமைவது, தமிழ்நாடு தனது

உத்திகளை மேம்படுத்தி தனது தகுதி மதிப்பினை மென்மேலும் உயர்த்திட சிறந்த வாய்ப்பினை வழங்குகிறது. இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்திடும் வகையில் இந்நிறுவனங்களை தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கு தகவல் தொழில்நுட்பவியல் துறை அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

தரவு மையங்களை நிறுவுவதன் மூலமும், டிஜிட்டல் இணைப்பை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்குவதன் மூலமும், டிஜிட்டல் உட்கட்டமைப்பை மாநிலம் மேம்படுத்தி வருகிறது. உகந்த அமைவிடம், சிறந்த இணைப்பு வசதி, நிலையான மற்றும் உபரி மின் சக்தி ஆகியவற்றைக் கொண்டிருப்பதன் காரணமாக சென்னை ஒரு தரவு மைய முனையமாக வளர்ந்து வருகிறது. பாரத்நெட் திட்டம் வாயிலாக தமிழகத்தில் உள்ள 12,525 கிராம ஊராட்சிகளுக்கும் குறைந்த பட்சம் 1 Gbps அளவிலான அதிவேக இணைப்பு, கண்ணாடி இழை

வடம் வழியாக வழங்கப்படுவதுடன், குரல், தரவு மற்றும் காணொளி போன்ற மூன்று சேவைகளும் குறைந்த விலையில் வழங்கப்படும்.

நல் ஆளுகையில் தமிழகம் ஒரு உதாரண மாநிலமாகத் திகழ்கிறது. குடிமக்களின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு சேவைபுரிய தகவல் தொழில்நுட்பம் அரசுக்கு பேருதவி புரிகிறது. ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய முதலமைச்சரின் பொதுமக்கள் குறைதீர் மேலாண்மை அமைப்பு (IIPGCMS), குடிமக்களின் கோரிக்கைகளை பல்வேறு தளங்கள் வாயிலாகப் பதிவு செய்வதற்கும், "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டம் வாயிலாக அக்கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்படுவதற்கும் உதவுகிறது.

முன்னேற்றத்திற்கான பாதையில், காகிதமற்ற, நேரடித் தொடர்பற்ற, வெளிப்படையான சேவைகளை குடிமக்களுக்கு அளிப்பதன் வாயிலாக ஆளுகையை

மாற்றியமைத்திட தமிழகம் உறுதிபூண்டுள்ளது. ஒரு முன்னுதாரண மாற்றத்தைக் கொண்டு வரும் வகையில், ஆளுகையில் விளைவுகளுக்கு பதிலாக தீர்வுகளை பெறுவதிலும், எதிர்வினையாற்றலுக்குப் பதிலாக செயல்வினை ஆற்றுவதிலும் கவனம் செலுத்துவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

தொழில்நுட்பம் என்பது இலக்கினை அடையத்தக்க ஒரு வழிமுறையாகும். தமிழகத்தில் குடிமக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையிலமைந்த SMART எனப்படும் துரிதமான (Swift), கண்காணிக்கக்கூடிய (Monitorable), எளிதில் அணுகக்கூடிய (Accessible), பொறுப்புடன்கூடிய (Responsive) மற்றும் வெளிப்படையான (Transparent) ஆளுகையை அளிக்க தகவல் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்ப முதலீடுகளில் ஏற்படும் வளர்ச்சி மாநிலத்தில் பொருளாதார மேம்பாடு மற்றும் செழிப்பினை ஏற்படுத்தும்.

# அத்தியாயம் – II

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்)

### 1. முன்னுரை

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், நிறுவனங்கள் சட்டம் 1956–இன் கீழ், 21.03.1977 அன்று பதிவு செய்யப்பட்டு மாநிலத்தில் மின்னணுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட, தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனம் ஆகும். தமிழ்நாடு மின்னணு நிறுவனம், மாநிலத்தில் மின்னணுத் தொழில்துறை வளர்ச்சி பெறுவதற்கு தனது பங்களிப்பை அளித்து வருகிறது. மாநிலத்தின் மின்னணுத் துறை, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த உற்பத்தி மற்றும் சேவைகள், தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு ஆகியவற்றின் வளர்ச்சியில் இது முக்கியப் பங்கினை வகிக்கிறது.

## 2. செயல்பாடுகள்

### 2.1 தகவல் தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் வளர்ச்சி

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த தொழில் நிறுவனங்களின் விருப்ப இலக்காக தமிழகத்தை உருவாக்குவதில் இந்நிறுவனம் முக்கியப் பங்கு வகிக்கிறது. தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் முதலீடுகளை ஈர்த்து, உள்கட்டமைப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறையில் மாநிலம் வளர்ச்சி பெறுவதற்கு இந்நிறுவனம் பெரிதும் உதவியுள்ளதுடன், மாநிலத்தில் அதிக அளவிலான வேலைவாய்ப்பினையும் உருவாக்கியுள்ளது.

எல்காட் நிறுவனம், முதலீட்டு ஊக்குவிப்பு, தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு உருவாக்கம் மற்றும் திறன்மேம்பாட்டில் முக்கியப் பங்கு வகிப்பதுடன், தகவல் தொழில்நுட்பத் துறையின்

முன்னேற்றத்திற்கு கீழ்க்கண்ட வகையில் பங்களித்துள்ளது :

- சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஓசூர் ஆகிய இடங்களில் 8 தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs) உருவாக்கம்.
- சுமார் 1588.16 ஏக்கர் (1321.61 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் + 266.55 ஏக்கர் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அல்லாத நிலப்பரப்பு) நிலப்பரப்பில், ரூ.745 கோடி முதலீட்டில் எல்காட் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs) உருவாக்கம்.

இந்த எல்கோசெஸ்கள் இந்திய நிறுவனங்களை பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்து, மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல்

தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகளுக்கான துறையில் ஏற்றுமதி, முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பு செய்துள்ளன. 2020–2021–ஆம் ஆண்டிற்கான இச்சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் (ELCOSEZs) மென்பொருள் ஏற்றுமதி ரூ.23,590 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்களின் மூலம் தோராயமாக 90,000 நபர்கள் நேரடி வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். மேலும், EMC 2.0 திட்டம் மூலமாக மின்னணுப் பொருட்கள் உற்பத்தியை ஊக்குவிக்கவும் எல்காட் நிறுவனம் முயற்சி மேற்கொள்ளும்.

- தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகளுக்கான முதலீடுகளுக்கு சிறந்ததொரு இடமாகத் தமிழகத்தை உருவாக்கிடும் வகையில்,

- எலெக்ட்ரானிக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (ELCINA)–வின் 'சோர்ஸ் இந்தியா' (SOURCE INDIA) – மின்னணு வழங்கு தொடர் நிகழ்வு 9 மற்றும் 10 செப்டம்பர் 2020–இல் நடைபெற்றது.
- உலகளாவிய "யாதும் ஊரே" மாநாடு மற்றும் கண்காட்சி (Conclave–cum–Expo) 29 அக்டோபர் முதல் 31 அக்டோபர் 2020 வரை நடைபெற்றது.
- உலகளாவிய TiE மாநாடு – மெய்நிகர் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி 2 மற்றும் 3 செப்டம்பர் 2020–இல் அமெரிக்காவில் நடைபெற்றது.
- உலகளாவிய TiE மாநாடு – தொழில் முனைவு 360° – 8 டிசம்பர் 2020 முதல் 10 டிசம்பர் 2020 வரை நடைபெற்றது.
- CONNECT தொடர் நிகழ்ச்சிகள் சென்னை, ஓசூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் முறையே 15 முதல் 19 செப்டம்பர் 2020, 18

டிசம்பர் 2020 மற்றும் 22 டிசம்பர் 2020 ஆகிய நாட்களில் நடைபெற்றன.

- தேசிய நிதித் தொழில்நுட்ப நிகழ்ச்சி (FinTERACT) 27 ஜனவரி முதல் 29 ஜனவரி 2021 வரை நடைபெற்றது.
- இந்திய மற்றும் பிரெஞ்சு வர்த்தக சபை மற்றும் தொழில் துறை (IFCCI) மூலம் இந்திய பிரெஞ்சு முதலீட்டு மூன்றாவது மாநாடு 11 மற்றும் 12 பிப்ரவரி 2021 ஆகிய நாட்களில் நடைபெற்றது.

- தகவல், தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கொள்கை, 2018–இன்படி (ICT Policy–2018) தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதற்கு கூடுதல் FSI பலன்களை CMDA/DTCP–ல் இருந்து பெறுவதற்கு சான்றளிக்கும் நிறுவனமாக செயல்படுகிறது.
- உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் (GIM) வாயிலாகத் தமிழகத்திற்குப் பெறப்பட்ட முதலீடுகளுக்கான தொடர் நடவடிக்கை.

## 2.2 எல்காட் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (ELCOSEZs)

### 2.2.1 எல்கோசெஸ் (ELCOSEZ) சோழிங்கநல்லூர், சென்னை

எல்காட் நிறுவனம் சென்னை சோழிங்கநல்லூரில் 377.08 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.228 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது.

எல்காட் இதில் அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 6,358 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டியுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிமிடெட் | 80 |
| 2 | எச்.சி.எல் பிரைவேட் லிமிடெட் | 50 |
| 3 | டெக் மஹிந்திரா பிரைவேட் லிமிடெட் | 50 |
| 4 | ஃபோர்ட் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் | 28 |
| 5 | காக்னிசன்ட் டெக்னாலஜி சொல்யுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 20 |
| 6 | சதர்லேண்ட் குளோபல் சர்வீசஸ் லிமிடெட் | 15 |
| 7 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 16 |

இந்த நிறுவனங்கள் 109.31 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தங்களுடைய கட்டடப் பணிகளை முடித்து தோராயமாக 67,000 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. இந்தத் தனியார் நிறுவனங்கள், மென்பொருள் உருவாக்கம் (Software Development),

பராமரிப்பு மற்றும் சோதனை (Maintenance & Testing), ஆலோசனை (Consulting) மற்றும் வணிக வெளிப்பணி சேவைகள் (Business Process Outsourcing) போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏற்றுமதி சார்ந்த நடுத்தர, குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் (MSME) மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் இடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், 2.33 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள், ரூ.88.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 2.2.2 எல்கோசெஸ் (ELCOSEZ) – விளாங்குறிச்சி, கோயம்புத்தூர்

எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் விளாங்குறிச்சியில் 62 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.167 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது.

எல்காட் இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 3,524 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாகக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | விப்ரோ லிமிடெட் | 9.5 |
| 2 | டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் | 9.5 |

இந்த நிறுவனங்கள் 23 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்து, 13,200 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

மேலும் 2.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப்

பணிகள் ரூ.114.16 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 2.2.3 எல்கோசெஸ் (ELCOSEZ) – இலந்தைக்குளம், மதுரை

எல்காட் நிறுவனம், மதுரை மாவட்டம் இலந்தைக்குளத்தில், 28.91 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.34 கோடி முதலீட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்கியுள்ளது. இதில் எல்காட் நிறுவனம் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கி, 60,205 சதுர அடி கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் | 11.25 |
| 2 | எச்.சி.எல். இன்ஃபோ சிஸ்டம்ஸ் லிமிடெட் | 6.75 |
| 3 | செல்லா சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் | 2.25 |
| 4 | தமிழ்நாடு மின்சார வாரியம் | 0.58 |

இது தவிர, 6,000 சதுர அடி நிலப்பரப்பு, ரீபார் டிசைன் அன்டு டீடெய்ல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தனியார் நிறுவனங்கள் 7.22 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி இயங்கி வருகின்றன.

மேலும், நிருவாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் கீழ்க்காணும்

நிறுவனங்களுக்கு பின்வருமாறு இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | கேலக்சி இன்ஃபோடெக் | 2,508 |
| 2 | ஏ.எம்.பி.சி. டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் | 3,277 |
| 3 | சாய் பி.பி.ஓ. சர்வீசஸ் லிமிடெட் | 15,181 |
| 4 | நியாமோ என்டர்பிரைசஸ் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 30,103 |
| 5 | சிவிஜஏசி கன்சல்டிங் | 9,136 |

இந்த நிறுவனங்கள் ஆலோசனை, செயலி மேம்பாடு, வணிக வெளிப்பணி சேவைகள் (BPO) மற்றும் தரவு மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொண்டு தோராயமாக 7,200 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

### 2.2.4 எல்கோசெஸ்–(ELCOSEZ) வடபழஞ்சி, மதுரை

மதுரையிலுள்ள வடபழஞ்சி கிராமத்தில் எல்காட் நிறுவனம் 245.17 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.70 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் எல்கோசெஸ்க்கு தேவைப்படுகின்ற மேம்பாலத்தையும் உருவாக்கி, 70,139 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | எச்.சி.எல். | 60 |
| 2 | செயின்–சிஸ் சாஃப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் | 20 |

| | | |
|---|---|---|
| 3 | பினாக்கிள் இன்ஃபோடெக் சொல்யூஷன்ஸ் | 10 |

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 59,166 சதுர அடி பரப்பளவில் இடவசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)** |
|---|---|---|
| 1 | நியாமோ என்டர்பிரைசஸ் சொல்யூசன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 46,968 |
| 2 | நியாமோ ஒர்க்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 11,543 |
| 3 | செயின்–சிஸ் சாப்ட்வேர் எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் | 655 |

இந்த நிறுவனங்கள், ஆலோசனை, சம்பளப்பட்டியல் செயலாக்கம் மற்றும் தரவு மின் உருவாக்கம் போன்ற பணிகளை மேற்கொள்கின்றன.

### 2.2.5 எல்கோசெஸ் (ELCOSEZ) – நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி

திருச்சியிலுள்ள நவல்பட்டில், எல்காட் நிறுவனம் 147.61 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.60 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் 123.23 ஏக்கர் நில பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டலமாக உள்ளது. இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தி, 59,960 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்ப கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் ஐலிங்க் மல்டிடெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (iLink Multitech Solutions Pvt. Ltd.) நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 59,960 சதுர அடி இட வசதி முழுமையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்)** |
|---|---|---|
| 1 | ஐலிங்க் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட் | **6,668** |
| 2 | சயின்டிஃபிக் பப்ளிஷிங் நிறுவனம் | 30,250 |
| 3 | உரம் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 5,976 |
| 4 | விடார்ட் டெக்னாலஜிஸ் | 3,643 |
| 5 | பேரிடர் மீட்பு மையம் | 5,963 |
| 6 | ஜிஐ டெக் கேமிங் கம்பெனி இண்டியா பிரைவேட் லிமிடெட் | 4,919 |
| 7 | விஆர் டெல்லா ஐடி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 2,541 |

இந்த நிறுவனங்கள் மின் வெளியீடு (e–Publishing), மென்பொருள் உருவாக்கம் (Software Development), வணிக செயல்முறை மேலாண்மை சேவைகள் மற்றும் தீர்வுகள் (Business Process Management Services & Solutions), விளையாட்டு மென்பொருள் உருவாக்கம் (Gaming Software Development) போன்ற பணிகளை மேற்கொண்டு தோராயமாக 1,390 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு முழுமையாக இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 1.16 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் ரூ.48.10 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

### 2.2.6 எல்கோசெஸ் (ELCOSEZ) – கங்கைகொண்டான், திருநெல்வேலி

திருநெல்வேலியிலுள்ள கங்கைகொண்டானில் எல்காட் நிறுவனம் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார்

ரூ.55 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கியுள்ளது. இதில் 290 ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டலமாக உள்ளது.

இதில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் 56,720 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது. இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் கேலிபர் இன்டர்கனெக்ட் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் (Caliber Interconnect Solutions Pvt. Ltd.) நிறுவனத்திற்கு 5,994 சதுர அடி பரப்பளவில், இட வசதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்ஸில் சின்டெல் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் (Syntel International Pvt. Ltd.) நிறுவனத்திற்கு 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 2.60 இலட்சம் சதுர அடி பரப்பளவில், தகவல் தொழில்நுட்பக்

கட்டடத்தைக் கட்டி முடித்து, தோராயமாக 200 பணியாளர்களுடன் மென்பொருள் சேவைகளை வழங்கி வருகின்றது.

### 2.2.7 எல்கோசெஸ் (ELCOSEZ) – ஜாகீர் அம்மாபாளையம், சேலம்

எல்காட் நிறுவனம், சேலம் ஜாகீர் அம்மாபாளையத்தில் 53.33 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.44 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி உள்ளது.

மேலும், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,174 சதுர அடி பரப்பளவு கொண்ட நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தையும் கட்டி முடித்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் பின்வரும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் 27.87 ஏக்கர் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நில ஒதுக்கீட்டின் அளவு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1 | மகிமா டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 3 |
| 2 | வீ. டெக்னாலஜிஸ் | 9.49 |
| 3 | டேன்ட்ரான்ஸ்கோ லிமிடெட் (TANTRANSCO LTD.) | 7.88 |
| 4 | இ-முத்ரா லிமிடெட் | 2.5 |
| 5 | அன்மால் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 1 |
| 6 | ஃபோகஸ் ஆர் கன்சல்டன்சி அண்டு டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 1 |
| 7 | நியூராடெக் கன்சல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 3 |

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 37,958 சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | இ–முத்ரா லிமிடெட் | 2,989 |
| 2 | ரேவேல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 3,704 |
| 3 | நியூரா டெக் கன்ஸல்டன்சி சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் | 3,704 |
| 4 | டைலாஜி சொல்யூஷன்ஸ் எல்எல்பி | 1,000 |
| 5 | நாலெட்ஜ் லென்ஸ் பிரைவேட் லிமிடெட் | 1,000 |
| 6 | ஸ்டின்சாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 989 |
| 7 | வீ டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 10,562 |
| 8 | வீ இமேஜிங் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் | 10,562 |
| 9 | மஹிமா டெக்னாலஜி பிரைவேட் லிமிடெட் | 3,448 |

இந்த நிறுவனங்கள் தோராயமாக 614 பணியாளர்களுடன் இயங்கி வருகின்றன.

### 2.2.8 எல்கோசெஸ் (ELCOSEZ) – விஸ்வநாதபுரம், ஓசூர்

எல்காட் நிறுவனம், ஓசூர், விஸ்வநாதபுரத்தில் 174.47 ஏக்கர் நிலப்பரப்பில், ரூ.85 கோடி முதலீட்டில் எல்கோசெஸ்ஸை உருவாக்கி அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், 62,100 சதுர அடி பரப்பளவில் நிர்வாக மற்றும் தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளது.

இந்த தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில் பின்வரும் நிறுவனங்களுக்கு 44,589 சதுர அடி பரப்பளவில், இட வசதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது :

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தின் அளவு (சதுர அடியில்) |
|---|---|---|
| 1 | யு.எஸ். டெக்னாலஜி இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் | 21,100 |

| | | |
|---|---|---|
| 2 | சந்துசாஃப்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் | 10,550 |
| 3 | தென்றல் இன்ஃபோடெக் | 2,989 |
| 4 | எமினென்ட் லேப்ஸ் சாஃப்ட்வேர் பிரைவேட் லிமிடெட் | 9,950 |

## 2.3 தொழில்முனைவோர் மையம் (Start-up Warehouse)

எல்காட் நிறுவனம், 'நாஸ்காம்' நிறுவனத்தை அறிவுசார் பங்குதாரராகக் கொண்டு சென்னையிலுள்ள டைடல் பார்க்கில் 6,860 சதுர அடி பரப்பளவில், 90 இருக்கை வசதி கொண்ட தொழில் முனைவோர் மையத்தை ரூ.3.53 கோடி முதலீட்டில் அமைத்துள்ளது. 44 தொடக்க நிலை நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக அடுத்த நிலையை அடைந்துள்ளன.

## 2.4 ஃபின்ப்ளூ – நிதி தொழில்நுட்ப உயர்தனிச் சிறப்பு மையம் (Centre of Excellence in FinTech)

சென்னையில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில் (STPI) "ஃபின்ப்ளூ" (FinBlue)

என்ற நிதித் தொழில்நுட்ப உயர்தனிச் சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், தமிழக அரசு ரூ.5.75 கோடி முதலீடு செய்துள்ளது. தொடக்க நிலை நிறுவனங்களுக்கு (Start–ups) தேவையான உதவிகள், வழிகாட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. தேசிய மற்றும் பன்னாட்டு நெறிப்படுத்தும் அமைப்புகளுடன் இணைந்து தமிழகத்தில் நிதித் தொழில்நுட்பச் செயல்பாடுகளை செயல்படுத்தி மாநிலத்தில் நிதித் தொழில்நுட்பத்திற்கான முதலீடுகளை ஈர்க்கும் மையமாகவும் "ஃபின்புளூ" (FinBlue) உள்ளது.

## 2.5 தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு

குடிமக்களுக்கு மின்னாளுமை சேவைகளை வழங்குவதற்கும் அரசுத் துறைகளுக்கு இணைப்புகளை வழங்குவதற்கும் தேவையான தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை எல்காட் நிறுவனம் உருவாக்கிப் பராமரித்து வருகிறது.

### 2.5.1 வலையமைப்பு சேவைகள்

#### 2.5.1.1 தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பானது தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் (NeGP) கீழ் மத்திய மற்றும் மாநில அரசுகளினால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு 708 இருப்பு முனைகளுடன் (PoPs) தொடங்கப்பட்டது. தற்போது 829 இருப்புமுனைகளுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு, மாநில அரசுத் துறைகள், தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தமது பயன்பாடுகள், சேவைகள் மற்றும் சேவையகங்களை பாதுகாப்பான முறையில் அணுக உதவுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் சுமார் 3000 அலுவலகங்களுக்கு TNSWAN இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு அரசுத்துறைகளுக்கு, குரல், தரவு மற்றும் காணொளி சேவைகளை வழங்குவதன் மூலம், அரசுத்துறைகள் பொதுமக்களுக்கு தரமான சேவைகளை வழங்க வழிவகை செய்கிறது.

மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையின் (MeitY, GoI) வழிகாட்டுதலின்படி தேசிய அறிவுத்திறன் வலையமைப்புடன் (National Knowledge Network–NKN) தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் மாவட்ட இருப்பு முனைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

**2.5.1.1.1 தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட விரிவாக்கம்**

தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பின் இரண்டாம் கட்ட செயல்பாட்டினை, மூன்று வருட

காலத்திற்கு, பிப்ரவரி 2022 வரை நீட்டித்து அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### 2.5.1.2 பிற இணைப்பு சேவைகள்:

#### 2.5.1.2.1 MPLS VPN இணைப்பு

Multi–Protocol Label Switching Virtual Private Network (MPLS VPN) இணைப்பானது பதிலி இணைப்பாக வழங்கப்படுகின்றது. எல்காட் நிறுவனம், ஏறத்தாழ 60 தமிழக அரசு அலுவலகங்களுக்கு MPLS VPN இணைப்பை வழங்கி வருகிறது.

#### 2.5.1.2.2 இணையக் குத்தகை இணைப்பு

இணையக் குத்தகை இணைப்பு சுமார் 248 அரசு அலுவலகங்களுக்கு தனிப்பட்ட இணைப்பாக வழங்கப்பட்டு வருகிறது.

#### 2.5.1.2.3 VPNoBB இணைப்பு

Virtual Private Network over Broadband (VPNoBB) இணைப்பு குறைந்த செலவில் அகஇணைய (Intranet) குறைந்த அலைவரிசையை வழங்குவதற்கான

மாற்றாகும். எல்காட் நிறுவனம், ஏறத்தாழ 273 அரசு அலுவலகங்களுக்கு VPNoBB இணைப்பு சேவைகளை வழங்கி வருகிறது.

### 2.5.2 பதிவேற்றம் மற்றும் தொடர்புடைய சேவைகள்

அரசின் மின்னணு சேவைகளைப் பாதுகாப்பான முறையில் வழங்குவதற்கான மிக முக்கியமான கட்டமைப்பாகத் தமிழ்நாடு மாநிலத் தரவு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசுத் துறைகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்கள் தங்களது தரவு, மென்பொருள் பயன்பாடுகள், சேவைகள் மற்றும் சேவையகங்களை பொதுவான, மேம்படுத்தப்பட்ட, பாதுகாக்கப்பட்ட மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட கட்டமைப்பில் ஏற்றம் செய்திடல் மற்றும் ஒருங்கிணைப்பதன் மூலம் எளிதாக செயல்படுத்தவும் இத்தரவு மையம் உதவிபுரிகிறது.

#### 2.5.2.1 தமிழ்நாடு மாநில தரவு மையம் – 1 (TNSDC – 1)

தமிழ்நாடு மாநில தரவு மையம், நாட்டிலேயே முதன்முறையாக ISO சான்றிதழ் பெற்ற மாநில தரவு

மையமாகும். இம்மையத்தின் செயற்பாடுகள் சுமார் 65 அடுக்குகளுடன், 12 வருடத்திற்கான திட்ட மதிப்பீடான ரூ.138 கோடி செலவினத்தில் 2011–இல் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

### 2.5.2.2 தமிழ்நாடு மாநில தரவு மையம் – 2 (TNSDC–2 )

தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் முதல் பகுதி முற்றிலும் பயன்படுத்தப்பட்ட நிலையில், இரண்டாம் பகுதி நிறுவப்பட்டு 2020–ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதன் திட்டச் செலவினம் ரூ.74.7 கோடி ஆகும். இந்த தரவு மையம் 195 அடுக்குகளுக்கு இடமளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது மற்றும் முழு வடிவமைப்பும் தொகுப்பு அமைப்பாக உள்ளதால், தடையற்ற அளவு அதிகரிக்கும் திறனுடையது.

தற்போது வரை, 231–க்கும் மேற்பட்ட பயன்பாடுகள் மற்றும் சேவைகள் TNSDC–1 மற்றும் TNSDC–2–இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

#### 2.5.2.3 தமிழ்நாடு பேரிடர் மீட்பு மையம் (TNDRC)

தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அரசுத்துறைகளின் முக்கிய மின்ஆளுகைப் பயன்பாடுகளை பேரிடர்களின் போதும் தடையின்றி தொடர்ச்சியாகச் செயல்படுத்திட ஏதுவாக, எல்கோசெஸ், திருச்சிராப்பள்ளியில் பேரிடர் மீட்பு மையம், 2018–ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

#### 2.5.2.4 தமிழ் மேகம் – தமிழ்நாடு மேகக் கணினிய சேவைகள்

எளிய மேலாண்மையுடன் கணினி வளங்களை பகிர்ந்தளிக்கக் கூடிய மேகக் கணினியச் சேவை, தமிழ்நாடு மாநிலத் தரவு மையத்தில் 2016–ஆம் ஆண்டு முதல் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது . இதன் 5 வருட காலத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.13.88 கோடி ஆகும்.

மேகக் கணினியச் சேவையில் உட்கட்டமைப்பு (infrastructure) மற்றும் இயங்குதளம் (platform) ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போதுவரை, 116

மென்பொருள் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு, இயங்கி வருகின்றன.

ரூ.9.98 கோடி மதிப்பீட்டில் மேகக்கணினிய உள்கட்டமைப்பை மேம்படுத்த மற்றும் பேரிடர் மீட்பு வசதியை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 2.5.3 மின்னணுப் பாதுகாப்பு

#### 2.5.3.1 தமிழ்நாடு மாநில தரவு மையத்திற்கான பாதுகாப்புக் கட்டமைப்பு

அனைத்து அரசுத் துறைகளின் மென்பொருட்கள் மற்றும் சேவைகளின் தரவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பின்வரும் உயர்நிலை பாதுகாப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :

1. பாதுகாப்புத் தகவல் மற்றும் நிகழ்வு மேலாண்மை கருவி (Security Information & Event Management – SIEM Tool)

2. பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் ஊடுருவல் சோதனை (Vulnerability Assessment and Penetration Testing – VAPT)

இவை இணையத்தாக்குதலுக்கு எதிரான தடுப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகின்றன.

### 2.5.3.2 தமிழகத்திற்கான இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பு (CSA –TN)

பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருந்து இணைய தாக்குதலை எதிர்கொள்ள, தமிழகத்திற்கான தகவல் பாதுகாப்பு கட்டமைப்பானது, சென்னையிலுள்ள C–DAC நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது. இணையப் பாதுகாப்புக் கட்டமைப்பின் 3 வருட காலத்திற்கான திட்டச் செலவினம் ரூ. 21.39 கோடி ஆகும்.

## 2.6 அரசின் வெளிப்படைத் தரவு

அரசின் வெளிப்படைத் தரவு (Open Government Data) இணையதளம் அரசுத்துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வெளிப்படையான தரவுத் தொகுப்புகளை, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வெளியிட உதவுகிறது.

அரசு வெளிப்படைத் தரவுகளுக்கான மாநில நிகழ்வு (State instance) உருவாக்கப்பட்டு https:/data.tn.gov.in என்னும் இணைய முகவரியில் இயங்கி வருகின்றது. தற்போது, இந்த இணையதளத்தில் 64 தமிழக அரசுத் துறைகள் மற்றும் முகமைகள் தொடர்பான 31,585 தரவுத் தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

## 2.7 ஆதார் நிரந்தரப் பதிவு மையங்கள் (PECs)

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) அங்கீகரிக்கப்பட்ட

முகமைகளுள் ஒன்றான எல்காட் நிறுவனம், ஆதார் பதிவு நடவடிக்கைகளைச் செயல்படுத்தி வருகிறது. இதன் பொருட்டு, எல்காட் நிறுவனம் 227 நிரந்தரப் பதிவு மையங்களை 32 மாவட்ட ஆட்சியரகங்கள், 11 மாநகராட்சித் தலைமை அலுவலகங்கள், 45 நகராட்சி மண்டல அலுவலகங்கள், 124 நகராட்சி அலுவலகங்கள், 2 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், 5 பேரூராட்சி அலுவலகங்கள், 4 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் 4 பொதுவைப்பு நிதி அலுவலகங்களில் ஏற்படுத்தியுள்ளது.

இதுவரையில் ஒட்டுமொத்தமாக இந்த மையங்களின் வாயிலாக, 31.08.2021 வரை 67,52,011 ஆதார் பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளன.

## 2.8 திறன் மேம்பாடு (Capacity Building)

தமிழக அரசுத் துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு கணினிசார்ந்த பயிற்சி வழங்குவதில் தமிழ்நாடு மின்னணு நிறுவனமானது முக்கிய பங்கு

வகித்து வருகிறது. பயிற்சி அளிப்பதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை பெருங்குடி வளாகத்திலும் மற்றும் 12 மாவட்டங்களிலும் ஏற்படுத்தியுள்ளது.

மின் ஆளுகைத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்குத் தேவையான தகவல் தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன்களுக்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை மாநிலம் முழுவதிலிருந்தும் பல்வேறு அரசுத் துறைகளிலிருந்து 1,21,378 நபர்கள் பயிற்சியில் பங்கேற்றுப் பயனடைந்துள்ளனர்.

## 2.9 வலையமைப்புச் சேவைகள்

எல்காட் நிறுவனம்

- பல்வேறு அரசுத் துறைகளின் காணொளிக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.

- மிக முக்கிய பிரமுகர்கள் வருகை தரும் பொழுது தேவைப்படும் வலையமைப்பு சிறப்பு உபகரணங்களை வழங்கி வருகின்றது.
- காணொளிக்காட்சி அமைப்புகள், பொது ஒலிப்பெருக்கி அமைப்பு, காணொளித்திரை (Video Wall) மற்றும் IVRS உபகரணங்களை கொள்முதல் செய்து நிறுவி வருகின்றது.
- தலைமைச் செயலகத்தில் வலையமைப்பு வசதிகளை (SECNET) முழு நேரமும் (24x7) பராமரிப்பதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

## 2.10 கொள்முதல் சேவைகள்

எல்காட் நிறுவனம், அரசுத் துறை / பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்கு மின்னணு வன்பொருள் மற்றும் மென்பொருள்களுக்கான விருப்பக் கொள்முதல் முகமையாகச் செயல்பட்டு வருகிறது.

எல்காட் நிறுவனம், அரசுத் துறைகளுக்கு தரமான மின்னணுப் பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கி வருகிறது. கோவிட்–19 நோய்த்தொற்றுக் காலத்திலும் அரசுத் துறைகளான மருத்துவம் – மக்கள் நல்வாழ்வு மற்றும் காவல் துறைகளுக்கு அவசர கொள்முதல் தேவைகளை எல்காட் நிறுவனம் உடனடியாகப் பூர்த்தி செய்துள்ளது.

மேசைக்கணினி, மடிக்கணினி, அச்சு இயந்திரம் மற்றும் பல்நோக்கு செயல்திறன் கொண்ட சாதனங்களை உற்பத்தி செய்யும் தயாரிப்பாளர்கள், எல்காட் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தப்புள்ளிகளில் கோரப்படும் மிக அதிகமான தேவைகளை கருத்தில் கொண்டு, அதில் பங்கு பெறுவதற்கு சிறந்த விலைப்புள்ளிகளை அளிக்கின்றனர். இதன் மூலம் தகவல் தொழில்நுட்பவியல் வன்பொருட்களின் விலைகளை சந்தை விலையை விட மிகவும் குறைவான விலையில் கொள்முதல் செய்து வழங்கி கணிசமான சேமிப்பு ஏற்படுவதை உறுதி செய்கிறது.

கடந்த 2020-21ஆம் ஆண்டில், ரூ. 245.15 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப சாதனங்களை கொள்முதல் செய்துள்ளது. வரும் 2021-22 நிதியாண்டில் ரூ.300 கோடி மதிப்பிலான தகவல் தொழில்நுட்ப சாதனங்களைக் கொள்முதல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் – III

## மின் – ஆளுமை இயக்குநரகம்
## மற்றும்
## தமிழ்நாடு மின் – ஆளுமை முகமை

### 1. முன்னுரை

மின்–ஆளுமை இயக்குநரகம், 2006–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தமிழ்நாடு மின்னாளுமை முகமை (TNeGA), தேசிய மின்–ஆளுமைக் கொள்கையை செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச்சட்டம், 1975–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட தன்னாட்சி அமைப்பாக, உருவாக்கப்பட்டது.

### 2. குறிக்கோள்கள்

i. தரமான தகவல் தொழில்நுட்பச் சேவைகளை வழங்குதல் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் புதுமையாக்கம் செய்தல்.

ii. மின் ஆளுகையை மாநிலம் முழுமையும் செயல்படுத்திட உரிய உட்கட்டமைப்பினை உருவாக்க உதவுவது.

iii. டிஜிட்டல் மாற்றத்திற்கான திட்டங்களில் நிர்வாக மாற்றத்திற்கான மேலாண்மைக்கு உதவுவது.

iv. மாநிலத்தின் போட்டித் தன்மையை மேம்படுத்தி, மாநிலத்தின் திறனை எதிர்காலத்திற்கு ஏற்றவாறு தயார் செய்ய உதவுவது.

v. தகவல் தொழில்நுட்பத்தின் பலன்களை, மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் மற்றும் அரசுக்கும் அளிப்பது.

vi. தரவு, ஒத்திசைந்து இயங்குதல் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றிற்கான தர நிர்ணயங்களை உருவாக்குவது.

vii. கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள், துவக்க நிறுவனங்கள், நிதி வழங்கும்

நிறுவனங்கள் மற்றும் புகழ்மிக்க தனிமனிதர்களை உள்ளடக்கிய ஒரு சூழலை உருவாக்குவது.

viii. அரசு ஊழியர்களின் தகவல் தொழில்நுட்ப அறிவுத்திறனை மேம்படுத்த உதவுவது.

## 3. தொழில்நுட்ப அமைப்புகள்

### 3.1 தகவல் தொழில்நுட்பப் பணிநிலைப் பிரிவு (IT Cadre)

மின்–ஆளுகைத் திட்டங்களைச் செயல்படுத்த அரசுத் துறைகளின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளை நிறைவேற்றும் வகையில், ஒரு தகவல் தொழில்நுட்பப் பணிநிலைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

### 3.2 மாநில மின்–குறிக்கோள் குழு (SeMT)

ஒன்றிய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மாநில மின்–குறிக்கோள் குழுவானது, தொழில்முறை அறிவுத்திறனை மேம்படுத்தவும் மற்றும் திட்ட நிர்வாக செயல்பாடு, தொழில்நுட்பம்,

நிறுவனம் சார்ந்த கட்டமைப்பு மற்றும் மாற்று மேலாண்மை ஆகியவற்றிற்கும் உதவுகிறது.

### 3.3 வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையம் – Centre of Excellence for Emerging Technologies (CEET)

செயற்கை நுண்ணறிவு, நம்பிக்கை இணையம், தரவுப் பகுப்பாய்வு மற்றும் பொருட்களின் இணையம் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஊக்குவித்திடவும் மற்றும் போட்டித் திறனை மேம்படுத்தவும் வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையத்தை (CEET) தமிழக அரசு நிறுவியுள்ளது. இது சுகாதாரம், வேளாண்மை மற்றும் கல்வி போன்ற பல்வேறு முன்னுரிமைத் துறைகளில் செயற்கை நுண்ணறிவு மற்றும் நம்பிக்கை இணையத் தொழில்நுட்பத்தை (Blockchain) புகுத்துவதன் வாயிலாக மேம்பட்ட ஆளுகை மற்றும் குடிமக்களுக்கான சிறந்த சேவை அளிக்கவும் உதவுகிறது.

வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கான உயர்தனிச் சிறப்பு மையம் (CEET) புதுமையாக்கத்தை கீழ்க்கண்ட வழிகளில் பரவச் செய்வதற்கான கிரியா ஊக்கியாகத் திகழ்கிறது :

I. அரசுத்துறைகளுக்கு குறைந்த செலவிலான, மேம்படுத்தக் கூடிய தீர்வுகளைக் கண்டறிதல்.

II. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் அரசுத் துறைகள், முகமைகள், தொழில் நிறுவனங்கள், தொழில் அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை உருவாக்குதல் மற்றும் கூட்டாக செயல்படுதல்.

III. சர்வதேச அளவில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் உள்ள சிறந்த செயல்பாடுகளை வரையறுத்தல் மற்றும் தரப்படுத்தி ஊக்குவித்தல்.

IV. அரசுத் துறைகளில் பல்வேறு நிலைகளில் உள்ள அலுவலர்களின் திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் நெறிப்படுத்தலில் ஈடுபடுதல்.

V. உயர் தொழில்நுட்பம் மற்றும் அதற்கு நிகரான, தொழில்நுட்பங்களை அளிக்கும் பிற நிறுவனங்களைத் தொடர்பு கொள்ளுதல்,

VI. வளர்ச்சித்திட்டங்கள், பயிற்சி வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், சிறப்பு விரிவுரைகள் மற்றும் இதர நிகழ்வுகளை நடத்துதல்.

VII. ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆய்வறிக்கைகள், தொழில் சார்ந்த ஆய்வறிக்கைகள் ஆகியவற்றை தயாரித்து சிறந்த மதிப்பாய்வுமிக்க சஞ்சிகைகள் மற்றும் மாநாடுகளில் வெளியிடுதல்,

VIII. அரசுத் துறைகளுக்கு, தேவையின் அடிப்படையில், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் குறிப்பிட்ட முன்மாதிரி வடிவத்தை உருவாக்கி வழங்குவது அல்லது வளர்ச்சி சார்ந்த பணிகளை மேற்கொள்வது.

IX. அரசுத் துறைகளின் சொத்து உருவாக்கம் மற்றும் நுகர்வுக்கான செயல்முறைகள் மற்றும் அவற்றின்

மறுபயன்பாட்டிற்கான மென்பொருள் உத்திகளை வகுப்பது.

### 3.4 மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் (District e-Governance Societies)

மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் மாவட்ட அளவில் மின்னாளுமை திட்டங்கள் தொடர்பான அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்க உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழும், சென்னையைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையரது தலைமையின் கீழும் இச்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இ-சேவை மையங்கள் ஈட்டும் வருவாயில் இருந்து 5 சதவீதத்தினை மாவட்ட மின்னாளுமைச் சங்கங்கள் பெறுகின்றன.

## 4. தரவுகள் அடிப்படையிலான நிர்வாகம்

### 4.1 முதலமைச்சர் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு உதவும் அமைப்பு

திட்டங்களின் செயலாக்கத்தை சிறப்பாகக் கண்காணித்திடவும், தரவு சார்ந்த ஆளுகையை வழங்கிடவும் முதலமைச்சர் மேற்கொள்ளும் முடிவுகளுக்கு உதவும் அமைப்பு ஒன்று வடிவமைக்கப்பட்டு வருகிறது. பல்வேறு துறைத் திட்டங்கள் / பணிகளின் செயல்திறன் சார்ந்த காரணிகளுக்கான நிகழ்நேர காட்சிவழிக் குறிப்புகளை கொண்டதாக இது அமையப்பெற்று, முடிவெடுப்பதில் உதவி புரியும். ஒரு துறையை பொறுத்தமட்டில், இந்த அமைப்பு, தரவுகளைக் கூராய்ந்து, தனது ஒருங்கிணைக்கப்பட்ட தரவுப் பகுப்பாய்வுத் திறனைக் கொண்டு, தடைகளை கண்டறிவதிலும், மேலாண்மை செய்வதிலும் அவற்றைத் தகர்த்தெறிவதிலும் உதவுவதன் வாயிலாக துறையின் செயல் திறனை மேலும் மேம்படுத்த உதவும்.

## 4. 2 மாநில குடும்ப தகவல் தொகுப்பு (SFDB)

தகவல் தொழில்நுட்பவியல் துறை, ரூ.47.5 கோடி செலவினத்தில், மாநில குடும்ப தகவல் தொகுப்பினை உருவாக்கி வருகிறது.

மாநில குடும்ப தகவல் தொகுப்பு, நிர்வாக மேம்பாட்டிற்கான தரவுகள் அடிப்படையில் முடிவெடுத்தலுக்கு ஆதரவு அளிக்கும் உட்கட்டமைப்பாக அமைய திட்டமிடப்பட்டுள்ளது. இது அனைத்து அரசுத் திட்டப் பயனாளிகளுக்கான ஒற்றை ஆதாரமாக விளங்கும். பல்வேறு துறைகளுக்கு இடையே தரவுகளை ஒத்திசைவு மற்றும் ஒருங்கிணைப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள துறை கட்டமைப்பினை இது மேம்படுத்துவதாக அமையும். மக்களுக்கு அரசின் சேவைகள் தடையின்றி கிடைக்க இது உதவும் என்பதோடு, அரசுத் திட்டங்களின் உள்ளார்ந்த தன்மை மேம்படவும் உதவும்.

## 4.3 தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு (TNGIS)

தமிழகத்தின் அனைத்து புவிசார் தரவுகளுக்கான ஒரே தளமாக தமிழ்நாடு மாநில இடம் சார்ந்த தரவுகள் உட்கட்டமைப்பு (TNSSDI) மற்றும் அதன் வலைதளம் (www.tngis.tn.gov.in) விளங்குகிறது.

இதுவரை, தொடர்புடைய 29 துறைகள் மற்றும் முகமைகள் இதில் அங்கம் வகிக்கின்றன. பல்வேறு துறைகளின் 358 அடுக்கு GIS தகவல்கள் ஏற்கெனவே பதிவேற்றப்பட்டுள்ளன.

மறுசுழற்சி பாகங்களை அடிப்படை கட்டமைப்பாகக் கொண்ட புதிய வலை–GIS வரைவுத்திட்டம் ஒன்று எதிர்காலப் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டு வருகிறது.

## 5. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG)

அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கிடும் வகையில், அமைந்த 17 தொடர்புடைய இலக்குகளின் தொகுப்பாக நீடித்த

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG) விளங்குகின்றன.

அனைத்துத் துறைகளின் நீடித்த நிலையான வளர்ச்சி மற்றும் தொடர்புடைய இணை இலக்குகளின் தரவுகளை சேகரிப்பதற்காக தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் ஒரு செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: தகவல் தொழில்நுட்பவியல் துறை தொடர்பான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு சாதனைகள்**

| வ எண் | குறியீடுகள் | 2020-21 சாதனைகள் |
|---|---|---|
| 1 | 16.6.1: பொதுமக்களுக்கு இணையதளம் வழியாக வழங்கப்படும் அரசு சேவைகளின் எண்ணிக்கை | 130 |
| 2 | 16.6.1a: கைபேசி ஆளுகைக்காக ஒன்றிணைக்கப்பட்ட துறைகள் / முகமைகளின் எண்ணிக்கை | 27 |

| | | |
|---|---|---|
| 3 | 16.6.1b: இ–தால் (e–Taal) வலை தளத்தில் மின் பரிமாற்றங்களின் எண்ணிக்கை | 41.3 கோடி |
| 4 | 16.6.1c: செயல்பாட்டில் இருக்கும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை | 10,818 |

## 6. பொதுமக்களுக்கான அரசு சேவைகள்

### 6.1 பொது சேவை மையங்கள் ( இ–சேவை)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மின்னணு சேவைகளை அரசு இ–சேவை மையங்கள் மற்றும் குடிமக்களுக்கான பொது இணையதளம் (https://www.tnesevai.tn.gov.in/Citizen/PortalLogin.aspx) வாயிலாக, வழங்கி வருகின்றது. இச்சேவை மையங்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக்கடன் வழங்கும் சங்கங்கள், கிராமப்புற வறுமை ஒழிப்பு குழுக்கள், மகளிர் திட்டம் – தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், மீன்வளத்துறை, கிராமப்புற தொழில்முனைவோர்

மற்றும் கண்டோன்மெண்ட் போர்டு போன்ற சேவை மைய முகமைகள் வாயிலாக அமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கான அரசின் சேவைகள் அவர்களின் இருப்பிடத்தின் அருகாமையிலேயே வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன.

31.08.2021 வரை தமிழகம் முழுவதும் மொத்தம் 10,818 பொது இ–சேவை மையங்கள் பல்வேறு முகமைகளின் கீழ் இயங்கி வருகின்றன. அதன் விவரம் பின்வருமாறு :

**அட்டவணை 2: அரசு இ–சேவை மையங்களை நடத்தும் முகமைகளின் பட்டியல்**

| வ. எண் | சேவை முகவர்கள் | மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் | 4,225 |
| 2. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் | 580 |

| | | |
|---|---|---|
| 3. | தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள் | 1,553 |
| 4. | மகளிர் திட்டம் – தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் | 2,386 |
| 5. | மீன் வளத்துறை | 153 |
| 6. | கன்டோன்மெண்ட் போர்டு | 3 |
| 7 | கிராமப்புற தொழில் முனைவோர் | 1,918 |
| **மொத்தம்** | | **10,818** |

**அட்டவணை 3 : அரசு இ–சேவை மையங்கள் வாயிலாக வழங்கப்படும் 130 சேவைகளின் பட்டியல்**

| **அரசு இ–சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள்** | |
|---|---|
| **துறை** | **வழங்கப்படும் சேவைகளின் பெயர்** |
| | வருமானச் சான்றிதழ் |
| | பிறப்பிடச் சான்றிதழ் |

| | |
|---|---|
| **வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –40)** | இருப்பிடச் சான்றிதழ் |
| | சாதிச் சான்றிதழ் |
| | முதல் பட்டதாரிச் சான்றிதழ் |
| | கணவனால் கைவிடப்பட்டவர் சான்றிதழ் |
| | பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களுக்கான வருமானம் மற்றும் சொத்துச் சான்றிதழ் |
| | குடும்ப இடப் பெயர்வுச் சான்றிதழ் |
| | வேலையில்லாச் சான்றிதழ் |
| | விதவைச் சான்றிதழ் |
| | விவசாய வருமானச் சான்றிதழ் |
| | கல்வி ஆவணங்கள் பேரிடரின் போது தொலைந்தமைக்கான சான்றிதழ் |
| | ஆண் வாரிசு இல்லாச் சான்றிதழ் |
| | திருமணம் ஆகாதவர் என்பதற்கான சான்றிதழ் |

| | |
|---|---|
| | கலப்புத் திருமணச் சான்றிதழ் |
| | வாரிசுச் சான்றிதழ் |
| | சொத்து மதிப்புச் சான்றிதழ் |
| | அடகு பிடிப்போர் உரிமம் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல் |
| | வட்டிக்குப் பணம் கொடுப்போர் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்குதல் |
| | இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் |
| | சிறு / குறு விவசாயி சான்றிதழ் |
| | இ–அடங்கல் |
| | தற்காலிக பட்டாசு விற்பனை உரிமம் வழங்குதல் |
| | சமணச் சிறுபான்மை மதச் சான்றிதழ் வழங்குதல் |
| | பொதுக் கட்டிடங்கள் உரிமம் |

| | |
|---|---|
| | ஆதரவற்ற விதவையர் சான்றிதழ் |
| | இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் |
| | இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் |
| | இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் |
| | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் |
| | ஆதரவற்ற, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| | திருமணமாகாத பெண்கள் ஓய்வூதியத் திட்டம் |
| | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் |
| | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் |
| | குறைதீர் நாள் மனு |

| | |
|---|---|
| | தமிழ்நிலம் – முழுநிலப் பட்டா மாறுதல் |
| | தமிழ்நிலம் – கூட்டுப்பட்டா மாறுதல் |
| | தமிழ்நிலம் – உட்பிரிவு பட்டா மாறுதல் |
| | தமிழ்நிலம் – 'அ' பதிவேடு விவரம் |
| | தமிழ்நிலம் – சிட்டா விவரம் |
| | அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம் |
| | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்–I |
| | முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்–II |
| **சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –7)** | டாக்டர் தர்மாம்பாள் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம் |
| | டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் |

| | |
|---|---|
| | ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு ஏழை விதவையர் மகள் திருமண உதவித் திட்டம் |
| | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் |
| **காவல்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 9)** | சமூக சேவைப் பதிவேடு நிலை |
| | முதல் தகவல் அறிக்கை நிலை |
| | இணையவழி புகார் பதிவு செய்தல் |
| | புகார் நிலை அறிதல் |
| | வாகன விவரம் அறிதல் |
| | முதல் தகவல் அறிக்கை பார்வையிடுதல் |
| | சாலை விபத்து வழக்குகளில் ஆவணங்களை பதிவிறக்கம் செய்தல் |
| | காவல்துறையின் சரிபார்த்தல் சேவை |

| | |
|---|---|
| | தொலைந்த ஆவணங்களின் அறிக்கை |
| **தமிழ்நாடு வக்ஃப் வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –1)** | உலமா ஓய்வூதியத் திட்டம் |
| **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –1)** | மகப்பேறு முன்பதிவுத் திட்டம் |
| **கொதிகலன் இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –5)** | கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் பதிவு செய்தல் |
| | கொதிகலன் சட்டத்தின் கீழ் உரிமம் புதுப்பித்தல் |
| | உற்பத்தி மற்றும் கட்டமைப்பு உரிமம் அனுமதிக்கான விண்ணப்பம் |
| | உற்பத்தி மற்றும் கட்டமைப்பு உரிமம் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |

| | |
|---|---|
| | கொதிகலன்களுக்கான நீராவி சோதனை |
| **நகராட்சி நிர்வாக ஆணையரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –5)** | வரி இல்லா இதர கட்டணங்கள் |
| | தொழில் வரி வசூலித்தல் |
| | சொத்து வரி வசூலித்தல் |
| | பாதாள வடிகால் வரி வசூலித்தல் |
| | குடிநீர் வரி வசூலித்தல் |
| **சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –1)** | குடிநீர் மற்றும் கழிவுநீர் வரி |
| **பெருநகர சென்னை மாநகராட்சி (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –6)** | பிறப்புச் சான்றிதழ் அச்சிடுதல் |
| | இறப்புச் சான்றிதழ் அச்சிடுதல் |
| | வர்த்தக உரிமம் புதுப்பித்தல் |
| | நிறுவன வரி வசூலித்தல் |
| | தொழில் வரி வசூலித்தல் |

| | |
|---|---|
| | சொத்து வரி வசூலித்தல் |
| **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் இயக்ககம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –5)** | பலமாடிக் கட்டடத்திற்கான தடையின்மை இணக்கச் சான்றிதழ் |
| | பலமாடிக் கட்டடத்திற்கான திட்ட அனுமதிக்கான தடையின்மைச் சான்றிதழ் |
| | பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடத்திற்கான திட்ட அனுமதிக்கான தடையின்மைச் சான்றிதழ் |
| | பலமாடிக் கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| | பலமாடிக் கட்டடம் அல்லாத கட்டடத்திற்கான தீ பாதுகாப்பு உரிமம் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் |
| **தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (மொத்த சேவைகளின்** | மின் கட்டணம் செலுத்துதல் |
| | புதிய குறைந்த மின் அழுத்த இணைப்பு பதிவு செய்தல் |

| | |
|---|---|
| **எண்ணிக்கை –3)** | புதிய குறைந்த மின் அழுத்த இணைப்பிற்கான கட்டணம் செலுத்துதல் |
| **வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –4)** | பதிவு அடையாள அட்டை அச்சிடுதல் |
| | பதிவுப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | சுய விவரம் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பம் |
| | பதிவு செய்ய விண்ணப்பித்தல் |
| **மருந்து கட்டுப்பாட்டு இயக்குநரகம் (மொத்த சேவைகளின் 18)** | அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | ஓமியோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |

| | |
|---|---|
| | கட்டுப்படுத்தப்பட்ட அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | அட்டவணை X–ல் உள்ள மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | நகல் உரிமம் பெறுவதற்கான விண்ணப்பம் |
| | அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் |
| | கூடுதல் உற்பத்தி பொருளுக்கான அனுமதி வழங்குதல் |

| | |
|---|---|
| | தொழில்நுட்ப நபரை மாற்றம் செய்தல் |
| | சோதனை உரிமம் வழங்குதல் |
| | அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான கடன் உரிமம் / புதுப்பித்தல் |
| | அலோபதி மருந்துகளை மறு உறையிடுதலுக்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல் |
| | ஓமியோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல் |
| | அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமத்தினை தக்கவைத்தல் |
| | கட்டுப்படுத்தப்பட்ட அலோபதி மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமத்தினை தக்கவைத்தல் |


| | |
|---|---|
| | அட்டவணை X–ல் உள்ள மருந்துகளை விற்பனை செய்வதற்கான உரிமத்தினை தக்கவைத்தல் |
| | அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உரிமத்தினை தக்கவைத்தல் |
| | அலோபதி மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான கடன் உரிமத்தினை தக்கவைத்தல் |
| | அலோபதி மருந்துகளை மறு உறையிடுதலுக்கான உரிமத்தினை தக்கவைத்தல் |
| **எரி சக்தித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –2)** | வரைபட ஒப்புதல் சான்றிதழ் வழங்குதல் |
| | பாதுகாப்புச் சான்றிதழ் வழங்குதல் |
| **பெருநகர சென்னை போக்குவரத்து காவல் (GCTP)** | இ– ரசீது செலுத்துதல். |

| | |
|---|---|
| **மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 6)** | மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல் |
| | மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் வழங்குதல் |
| | தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணம் |
| | தேசிய கடல் மீனவர் மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணம் |
| | மீன்பிடித் தடைக்காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் – புதுப்பித்தல் |
| | மீன்பிடி குறைந்த காலத்தில் மீனவக் குடும்பத்திற்கு சிறப்பு நிவாரணம் – புதுப்பித்தல் |
| **மாற்றுத் திறனாளிகள் நலத்துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 3)** | கடன் உதவித் திட்டத்திற்கான விண்ணப்பம் |
| | திருமண உதவித் திட்டம் |

| | |
|---|---|
| | மாற்றுத் திறனாளிகள் பராமரிப்புப்படி |
| **கைத்தறி இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 6)** | டாக்டர். எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர்கள் நல அறக்கட்டளையின் கீழ் உதவித் தொகை வழங்குதல் |
| | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் |
| | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம் |
| | தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம் |
| | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா |
| | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா கீழ் சிக்ஷா சகயோக் யோஜனா திட்டம். |

| | |
|---|---|
| **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 1)** | தமிழ்நாடு அரசு நில உரிமையாளர் மற்றும் குடியிருப்போர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒழுங்குமுறைச் சட்டம் |
| **போக்குவரத்துத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –1)** | இ–ரசீது செலுத்துதல் |
| **வணிகவரி மற்றும் பதிவுத் துறை (மொத்த சேவைகளின் எண்ணிக்கை –2)** | வில்லங்கச் சான்றிதழ் வழங்குதல் |
| | சான்றளிக்கப்பட்ட நகல் வழங்குதல் |
| **பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருத்துவ இயக்குநரகம் (மொத்த சேவைகளின் எண்ணிக்கை – 3)** | CRS–இறப்பு பதிவு செய்தல் |
| | பிறப்புச் சான்றிதழ் |
| | இறப்புச் சான்றிதழ் |
| **மொத்தம்** | **130** |

**படம் 1: இ–சேவை மையங்கள் மூலம் வழங்கப்படும் முக்கிய 10 சேவைகளின் பரிவர்த்தனை எண்ணிக்கை**



**அட்டவணை 4: ஆண்டு வாரியான பரிவர்த்தனை எண்ணிக்கை**

**ஆண்டு வாரியாக பரிவர்த்தனை எண்ணிக்கை**
**ஜனவரி 2016 – ஆகஸ்ட் 2021**

| ஆண்டு (ஜனவரி – டிசம்பர்) | இ –சேவை (CSC) | இ –சேவை (குடிமக்கள் இணையதளம்) | மொத்தம் |
|---|---|---|---|
| 2016 | 1,02,91,198 | – | 1,02,91,198 |
| 2017 | 1,12,62,238 | – | 1,12,62,238 |
| 2018 | 1,04,11,812 | 1,83,304 | 1,05,95,116 |
| 2019 | 97,63,563 | 9,49,460 | 1,07,13,023 |
| 2020* | 75,86,335 | 14,00,513 | 89,86,848 |
| 2021* (ஜனவரி – ஆகஸ்ட்) | 41,41,553 | 15,31,242 | 56,72,795 |
| **மொத்தம்** | **5,34,56,699** | **40,64,519** | **5,75,21,218** |

*கோவிட்–19 காலகட்டம்

ஆரம்ப காலகட்டத்தில் மக்கள் பொது சேவை மையங்களுக்கு நேரில் சென்று இ–சேவைகளைப்

பெறவேண்டியிருந்தது. 2018–இல் மக்கள், எங்கிருந்தும், எப்பொழுதும் இ–சேவைகளைப் பெறும் வகையில் குடிமக்கள் பொது இணையதளம் துவக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இந்த இணையதளம் வாயிலான பரிவர்த்தனைகள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 2018 ஆம் ஆண்டில் 2 சதவீதம் இ–சேவை பரிவர்த்தனைகள் மட்டுமே குடிமக்கள் பொது இணையதளம் (Open Citizen Portal) மூலமாக வழங்கப்பட்டு வந்த நிலையில், 2021–ம் ஆண்டில் 20 சதவீதத்திற்கும் மேற்பட்ட இ–சேவை பரிவர்த்தனைகள் குடிமக்கள் பொது இணையதளம் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 6.2 ஆதார் நிரந்தர பதிவு மையங்கள்

தமிழ்நாட்டில் ஆதார் நிரந்தரப் பதிவு மையங்களை அமைத்து ஆதார் பதிவினை மேற்கொள்ளும் பதிவாளராக மின்னாளுமை இயக்குநரகம் / தமிழ்நாடு மின்னாளுமை முகமை,

இந்திய தனித்துவ அடையாள ஆணையத்தினால் (UIDAI) நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ஆதார் பதிவு சேவை பொதுமக்களுக்கு கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆகியவை தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் கீழ் ஆதார் பதிவு முகமைகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதார் சேர்க்கைக்கான நிரந்தரப் பதிவு மையங்கள் தலைமைச் செயலகம், எழிலகம், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள வட்டாட்சியர் அலுவலகங்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமையகம் மற்றும் மண்டல அலுவலகங்களில் அரசு கேபிள் டிவி நிறுவனத்தாலும், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் தலைமையகங்களிலும் (சென்னை நீங்கலாக) தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தாலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**அட்டவணை 5: 2020 – 2021 –ஆம் நிதியாண்டிற்கான ஆதார் பதிவு மற்றும் ஆதார் உருவாக்கப்பட்ட விவரங்கள்**

| பதிவு முகமை | மையங்களின் எண்ணிக்கை | பதிவுகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | ஆதார் எண் உருவாக்கப் பட்ட எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் (TACTV) | 318 | 10.4 | 9.7 |
| தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) | 227 | 5.9 | 4.3 |
| **மொத்தம்** | **545** | **16.3** | **14** |

## 7. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM) மற்றும் முதலமைச்சரின் உதவி எண் (1100)

முதலமைச்சரின் உதவி எண் அல்லது ஒருங்கிணைந்த மற்றும் உள்ளடக்கிய பொதுமக்கள் குறைகளுக்கான முதலமைச்சரின் உதவி எண் மேலாண்மை அமைப்பு (IIPGCMS), பொதுமக்கள் பல்வேறு வழிகளில் தங்கள் குறைகளைப் பதிவு செய்யும் வகையில் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைந்த முறையாகும். இதில், 1100 எண்ணுக்கு அழைப்பதன் வாயிலாகவும், இணையதளம், கைபேசி செயலி, மின்னஞ்சல், சமூக ஊடகம் வழியாகவும் அல்லது நேரடியாகவும் பதிவு செய்யலாம். இது மாநில அளவில் குறைகளைக் கையாளுவதற்கு ஏற்ற ஒற்றை வழித் தடமாகும்.

இந்த அமைப்பு, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர் (UTM)' திட்டத்தில் பெறப்பட்ட பொது மக்களின் மனுக்களை கள அலுவலர்களுக்கு அனுப்புவதுடன், மனுக்கள் செயலாக்கத்தை

கண்காணித்து மக்களுக்கு அவற்றின் மீதான நடவடிக்கையை தெரிவிக்கிறது. இத்திட்டம், மாவட்ட ஆட்சியர்கள், துறைத் தலைவர்கள், துறைச்செயலாளர்கள் ஆகியோர் குறைதீர்ப்பின் தரத்தைக் கண்காணிக்க ஏற்ற வகையில், முகப்புப்பலகை மற்றும் உடனடி அறிக்கைகளை அளிக்கும்.

## 8. முனைப்பான ஆளுகை

### 8.1 முனைப்பான சேவை வழங்கல்

முனைப்பான சேவைகள் வழங்குதல் என்பது, பொதுமக்கள் சேவைகளை பெற தகுதி பெறும்போது, அவர்கள் இல்லத்திற்கே சென்று அச்சேவைகளை வழங்கும் கோட்பாடாகும்.

தற்போதுள்ள தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் மற்றும் பயன்பாடுகளை ஒருங்கிணைத்து, மாநில குடும்ப தரவுத் தொகுப்பை (SFDB) அடிப்படையாகக்

கொண்டு ஆதார கோட்பாடு ஒன்று (proof of concept) வடிவமைக்கப்படும்.

## 9. வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள்

### 9.1 இ–பார்வை (e–Paarvai) : செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) அடிப்படையிலான கண்புரை கண்டறிதல் அமைப்பு (AI–based Cataract Detection System)

கண்புரை, இந்தியாவில் பார்வை இழப்பிற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும். ஆரம்ப நிலையிலேயே கண்புரையைக் கண்டறிவது பார்வை இழப்பைத் தவிர்க்கும். தமிழ்நாடு மின்னாளுமை முகமை, கண்புரையை வேகமாக கண்டறிவதற்காக செயற்கை நுண்ணறிவு சார்ந்த கைபேசி செயலியை உருவாக்கியுள்ளது. மதுரை, நாகப்பட்டினம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் இது பரிசோதிக்கப்பட்டு, 14 மாவட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நாஸ்காம் சிறப்பு விருது சமீபத்தில் வழங்கப்பட்டது.

## 9.2 முக அடையாளம் கண்டறியும் முறை – Face Recognition System (FRS)

செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான முக அடையாளம் காணும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. நவம்பர் 2020 முதல், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் அன்றாட வருகைப் பதிவுக்கு இந்த தொழில்நுட்பம் பயன்பாட்டில் உள்ளது. இந்த அமைப்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக (TANGEDCO) அலுவலகத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதர அலுவலகங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

**செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வேறு சில பயன்பாடுகள் :**

I. **திறன்மிகு உரையாடல் செயலி (Chatbot) –** பொதுமக்கள், அரசின் பல்வேறு சேவைகள் தொடர்பான உரையாடல் வசதியை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பெற, தமிழ்நாடு மின்னாளுமை முகமை, அண்ணா பல்கலைக்கழகத்துடன்

இணைந்து திறன்மிகு உரையாடல் செயலியை உருவாக்கியுள்ளது. இதனைப் பெற இ–சேவை இணையதளத்தை அணுகலாம். (https://www.tnesevai.tn.gov.in).

II. **பூச்சி மற்றும் நோய் அடையாளம் காணல் –** தமிழ்நாடு மின்னாளுமை முகமையினால் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மென்பொருள் வாயிலாக விவசாயிகள் நெற்பயிரில் உள்ள பூச்சிகளைக் கண்டறியவும், மக்காச்சோளத்தில் உள்ள நோய் தாக்குதலை கண்டறிந்து அவற்றை அழித்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் இயலும். விவசாயிகள், பாதிக்கப்பட்ட பயிர்களை தங்கள் கைபேசியில் படம் பிடித்து உழவன் செயலி மூலம் பதிவேற்றம் செய்யலாம்.

## 9.3 தமிழ்நாடு நம்பிக்கை இணைய பின்புலக் கட்டமைப்பு

தமிழக அரசுத் துறைகள், பொருத்திப் பயன்படுத்தும் (plug–n-play) முறையில், உபயோகிக்க மாநில அளவிலான நம்பிக்கை இணைய கட்டமைப்பு வழிவகை செய்யும். நம்பிக்கை இணையக் கட்டமைப்பில் சேகரிக்கப்படும் தரவுகள் அனைத்து துறைகளின் நம்பிக்கைக்கு உரியது மற்றும் மேற்கொண்டு எந்த சரிபார்த்தலும் தேவையில்லாமல், அனைத்து செயல்முறைகளுக்குமான ஒருமித்த உண்மை ஆதாரமாகப் பயன்படும். உதாரணமாக, இந்து சமய அறநிலைத் துறையின் ஆவணங்கள் மற்றும் பதிவுகள், நிலம் தொடர்பான ஆவணங்கள் மற்றும் அவற்றின் மாற்றங்கள், கல்விச் சான்றிதழ்கள், மதிப்பெண் சான்றிதழ்கள், இ–சேவை இணைய தளத்தின் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள், விதைச் சான்று மற்றும் கைவினைப் பொருட்களுக்கான சான்று போன்றவற்றைப்

பாதுகாப்பதற்கான பல பயன்பாடுகளை உருவாக்க நம்பிக்கை இணையம் பயன்படுத்தப்படும்.

## 9.4 குறைந்த அளவில் காகித பயன்பாட்டிற்கான மின்னணு உட்கட்டமைப்பு

### 9.4.1 தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கான மின்னஞ்சல் கணக்குகள்

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு அலுவலக தகவல் தொடர்பில் பயன்படுத்த பாதுகாப்பான மின்னஞ்சல் சேவை வழங்கப்பட்டு வருகிறது. தேசிய தகவலியல் மையம் (NIC) உதவியுடன், 2020–2021–ல் 19,000 மின்னஞ்சல் கணக்குகள் உருவாக்கப்பட்டன. தற்போதைய மின்னஞ்சல் சேவையை மேம்படுத்தி, 50,000 பயனாளிகளுக்கு கூடுதலாக உருவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 9.4.2 மின்–அலுவலகம்

மின் அலுவலகம் என்பது அரசு அலுவலகங்களுக்குள் வழக்கமான பணிகள் மற்றும் செயல்முறைகளை தன்னியக்கமாக்க அனுமதிக்கும்

பயன்பாட்டுத் தொகுப்பாகும். இத்தொகுப்பு குறைவான காகித பயன்பாட்டிற்கும், அலுவலக கோப்புகளின் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கவும், நிர்வாகத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. தணிக்கை மற்றும் வரலாற்று அம்சங்கள் செயல்முறைகளின் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கின்றன.

இதுவரை 61 அலுவலகங்களில் 10,000 பயனர்கள் இந்த மென்பொருளைப் பயன்படுத்துகின்றனர், மாநில அளவில் இத்திட்டம் படிப்படியாக செயற்படுத்தப்படும். முதற்கட்டமாக தலைமைச்செயலகத் துறைகளில் இது நடைமுறைப்படுத்தப்படும்.

## 10. திறன் மேம்பாடு

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை பயிற்சி உட்கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளது. இந்த உட்கட்டமைப்பு மின் அலுவலக செயற்பாட்டிற்கான அரசு அதிகாரிகளின் திறன் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்படும்.

## 11. நமது அரசு (MyGov)

"நமது அரசு" இணையதளமானது, கொள்கைகள், திட்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பான யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை பகிர்வது வாயிலாக, தமிழ்நாடு மக்கள் அரசு நிர்வாகத்தில் பங்கேற்பதற்கான தனித்துவ தளத்தை அளிக்கிறது.

## 12. அரசு இணையதளங்களுக்கான தரநிர்ணயம்

அரசு இணையதளங்களில் தகவல்கள் மற்றும் சேவைகளின் பயன்பாடு மற்றும் அணுகலை மேம்படுத்த, இந்திய அரசு, "இந்திய அரசாங்க இணையதளங்களுக்கான நெறிமுறைகள்" (GIGW) எனும் பெயரில் இணையதளங்களை வடிவமைத்து, உருவாக்கி, பராமரிப்பதற்கான நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. இந்த நெறிமுறைகளுக்கு ஏற்ப, மாவட்ட இணைய தளங்களின் தர நிர்ணயம் மற்றும் மாற்றுத்திறனாளிகள் அணுகும் வசதி ஆகியவற்றினை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை செயல்படுத்தி வருகிறது.

## 13. தேர்வு ஒரு சேவையாக (EaaS)

இணையத் தேர்வு மூலம் பணிகளுக்கு விரைவாக தேர்வு செய்ய, துறைகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அளிக்கும் சேவைகளை பயன்படுத்திக் கொள்ளலாம். பல்வேறு பணிகளுக்காக பாதுகாப்பான முறையில் துறைத் தேர்வுகளை நடத்த இது எளிதான விரைவான வழியாகும். இதுவரை, சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB), தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், (TNPCB), தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் நிறுவனம் (TEXCO) ஆகிய நான்கு துறைகள் இந்த முறையை வெற்றிகரமாகப் பயன்படுத்தி 7,229 பணியிடங்களைப் பாதுகாப்பாக நிரப்பியுள்ளன. 13.5 லட்சம் பேர் இந்த தேர்வுகளை எழுதியுள்ளனர்.

## 14. தகவல் தொழில்நுட்பப் பாதுகாப்பு தணிக்கை

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, அரசுத்துறை இணைய தளங்கள் மற்றும் செயலிகளுக்கான பாதுகாப்பு தணிக்கையினை, கணினி அவசர நிலை எதிர்வினை குழுவில் (சி.இ.ஆர்.டி–இன்) உள்ள தணிக்கை அதிகாரிகள் வாயிலாக மேற்கொள்கிறது.

2020–2021–இல் 72 அரசு இணையதளங்கள் மற்றும் செயலிகள் பாதுகாப்பு தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## 15. பல்வேறு அரசுத் துறைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருட்கள்

பல்வேறு அரசுத் துறைகளின் தேவைக்கேற்ப, தமிழ்நாடு மின்னாளுமை முகமை பின்வரும் மென்பொருள் சேவைமையங்களை உருவாக்கியுள்ளது:

| வ. எண் | துறைகள் | திட்டத்தின் பெயர் | இணைய முகவரிகள் |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமை | தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை முகமைக்கு வலைதளம் உருவாக்குதல் | https://tnsdma.tn.gov.in/ |
| 2 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | சட்ட அளவியல் புகார் கண்காணிப்பு அமைப்பு | https://tnlegalmetrology.in/ |
| 3 | தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறை | தமிழ்நாடு மின் ஆவண காப்பக வலைவாசல் | https://digiarchives.tn.gov.in |
| 4 | சென்னை பெரு நகர வளர்ச்சிக் குழுமம் | இணைய வழியில் திட்ட அனுமதி வழங்கல், | https://onlineppacmda.tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டடம் கட்டுவதற்கான அனுமதி வழங்குதல், நிறைவு சான்று வழங்குதல் மற்றும் வசித்தலுக்கான சான்று வழங்குதல் போன்ற சேவைகளை இணையம் வழியாக ஒற்றைச் சாளர முறையில் உருவாக்குதல் | |
| 5 | சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை | TNFUSRC–க்கு இணையவழி தேர்வுகள் நடத்த மென்பொருள் உருவாக்குதல் | https://www.forests.tn.gov.in/pages/view/tn–forest–news |

| | | | |
|---|---|---|---|
| 6 | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | மெய்நிகர் கற்றல் இணையதளம் மற்றும் இணைய வழி கற்றலுக்கான பகுப்பாய்வு முகப்புப்பக்கம் | https://tamilnaducareerservices.tn.gov.in/ |
| 7 | அனைத்து அரசுத் துறைகள் | மின்னணு பரிவர்த்தனை ஒருங்கிணைப்பு மற்றும் பகுப்பாய்வு அடுக்கு (e–Taal) | https://etaal.gov.in |
| 8 | நிலச் சீர்த்திருத்த ஆணையரகம் | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | https://oap.tn.gov.in/cmupt/ |
| 9 | மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் | ஆணையரக இணையதளம் முழு அளவில் கணினி மயமாக்குதல் | https://crdpr.tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 10 | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகை மேலாண்மைத் திட்டம் | https://tnhb.tn.gov.in/ |
| 11 | பெரியார் பல்கலைக் கழகம் | தொலைதூர கல்வி பயிலும் மாணவர்களுக் கான இணையவழி சேர்க்கை | http://pride.periyaruniversity.ac.in |
| 12 | மாநில திட்ட ஆணையம் | நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு உரிய இணையவழி கண்காணிப்பு தளம் | https://tnsdg.tn.gov.in |
| 13 | தமிழ்நாடு தொழில் துறை வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு பணியகம் | வாடிக்கையாளர் குறைதீர்ப்பு வலைவாசல் | https://www.bizbuddy.tn.gov.in/ |

| | | | |
|---|---|---|---|
| 14 | சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் | தொழில் நிறுவனங்களுக்கான புதிய குடிநீர் இணைப்பிற்கான இணையவழி விண்ணப்பம் | https://cmwssbindust.in/waternew |
| 15 | மாநில திட்ட ஆணையம் | மாநில திட்ட ஆணையத்தின் திட்டங்களுக் குக்கான வலைகண்கா ணிப்புத் தளம் | http://pndschemes.tn.gov.in |
| 16 | தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | தொழிலாளர் துறை வலைவாசல் உருவாக்குதல் | https://labour.tn.gov.in |
| 17 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மேகக்கணிமை அடிப்படையி லான சொத்து மேலாண்மை அமைப்பு | https://ams.tnegov.in |

| | | | |
|---|---|---|---|
| 18 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மின்மாவட்டம்– முதற்கட்டம், இரண்டாம் கட்டம் | https://tnesevai.tn.gov.in/ |
| 19 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | மாநில வலைவாசல் | http://www.tn.gov.in/ |
| 20 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | நிரந்தர சேர்க்கை மையம் (5 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ஆதார் பதிவு செய்தல்) | https://uidai.gov.in/aadhaar dashboard/ |
| 21 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | குறுஞ்செய்தி வாயிலாக சேவை நிலை கண்காணிப்பு வசதி | https://services.mgov.gov.in/ |
| 22 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | இணையவழி பட்டா மாற்றம் | https://tamilnilam.tn.gov.in/<br>CSC<br>https://tamilnilam.tn.gov.in/revenue/.html |

| | | | |
|---|---|---|---|
| 23 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | சிறு URL | https://tnegov.in/login |
| 24 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு | https://tngis.tn.gov.in |
| 25 | இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி | இந்திய மருந்துகளுக்கான உரிமம் வழங்கும் மாநில அதிகார அமைப்பு – வலைத்தளம் | https://www.tnslaim.tn.gov.in/ |
| 26 | தமிழ்நாடு அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியம் | அமைப்பு சாரா தொழிலாளர்கள் நலவாரியத்திற்கு ஒருங்கிணைந்த பயன்பாட்டு மென்பொருள் உருவாக்குதல் | https://tnuwwb.tn.gov.in |
| 27 | தமிழ்நாடு நடுவர் மற்றும் சமரச மையம் | இணையதளம் உருவாக்கம் | https://tnmcc.tn.gov.in |

| | | | |
|---|---|---|---|
| 28 | சட்டத் துறை | சான்று அலுவலர் பதவிக்கு இணைய வழி மூலம் விண்ணப்பம் செய்தல் / நடைமுறை புதுப்பித்தல் | https://tnnotary.tn.gov.in/ |
| 29 | தமிழ்நாடு மின்னாளுமை முகமை | தமிழ்நாடு மின்னாளுமை முகமைக்கான வலைவாசல் | https://tnega.tn.gov.in |
| 30 | இந்திய தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் | புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்ட வலைவாசல் | https://editn.in/ |
| 31 | வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை | வேலை வாய்ப்பு ஈடுபாடு மற்றும் கண்காணிப்பு அலகு | https://www.tnprivatejobs.tn.gov.in |

## அத்தியாயம் – IV

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

### 1. முன்னுரை

"அரசு கேபிள் டிவி நிறுவனம்" குறைந்த கட்டணத்தில், தரமான கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–இன் கீழ் 04.10.2007 அன்று உருவாக்கப்பட்டது. இந்நிறுவனம் 26.08.2011 அன்று, "தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

### 2. நோக்கங்கள்

கேபிள் டிவி துறையில் டிஜிட்டல் கேபிள் டிவி சேவையை வழங்குவதற்கான Digital Addressable System (DAS) உரிமம் பெற்ற மாநில அரசு நிறுவனம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஆகும். தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 01.09.2017 முதல் பொதுமக்களுக்கு இலவச தரநிலை வரையறை (SD)

செட்–டாப் பாக்ஸ்களை (Set–top Box) வழங்கி டிஜிட்டல் சேவையைத் துவக்கியது. 02.07.2018 அன்று சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய 5 இடங்களில் உயர்வரையறை (HD) சேவையைத் துவக்கியது.

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 201 சேனல்களை (140 கட்டணமில்லா சேனல்கள் + 61 கட்டண சேனல்கள்) ரூ.140 + GST என்ற மாதக் கட்டணத்தில் டிஜிட்டல் முறையில் வழங்குகிறது.

**3. அரசு இ–சேவை மையங்கள்**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 2014–ஆம் ஆண்டு அரசின் சேவைகளை குடிமக்களுக்கு வழங்குவதற்காக அரசு இ–சேவை மையங்களை நிறுவியது. தற்பொழுது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் 580 அரசு இ–சேவை மையங்களை தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் நிர்வகித்து வருவதுடன், 130

வகையான சேவைகளை வழங்குகிறது. இவற்றுடன் கூடுதலாகப் பின்வரும் சேவைகளும் வழங்கப்படுகின்றன:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படுபவர்களின் சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யும் சேவை.
2. வாக்காளர் அடையாள மாற்று அட்டைகளை அச்சிட்டு வழங்கும் சேவை.
3. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விக் கழகம் விற்பனை செய்யும் பாடப் புத்தகங்களைப் பெறுவதற்கு ஆன்லைனில் பதிவு செய்யும் சேவை.

நாளது தேதிவரை, 1,800 விண்ணப்பதாரர்களுக்கு அரசு சேவைகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**4. ஆதார் நிரந்தர பதிவு மையங்கள்**

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 318 ஆதார் நிரந்தர பதிவு மையங்களை மாநிலம் முழுவதும் அமைத்துள்ளது. மேலும், மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காகவும், வயது முதிர்ந்தவர்களுக்காகவும் சென்னைப் பெருநகர மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு "நடமாடும் ஆதார் சேர்க்கை மையமும்" செயல்பட்டு வருகிறது.

## அத்தியாயம் – V

## தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)

தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் எடுத்து செல்லும் நோக்கில், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET) இந்திய நிறுவனங்கள் சட்டம் 2013–ன் கீழ் 08.06.2018 அன்று, தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனமாக உருவாக்கப்பட்டது. இந்நோக்கம் "பாரத்நெட்" மற்றும் "தமிழ்நெட்" திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவற்றை கண்ணாடி இழை கம்பி வடம் (Optical Fibre Cable) மூலம் அதிவேக அலைக்கற்றை கொண்டு இணைப்பதன் மூலம் எட்டப்படும்.

**1. பாரத்நெட்**

ஒன்றிய அரசின் பாரத்நெட் திட்டமானது கண்ணாடி இழை கம்பிவடம் (Optical Fibre Cable) கொண்டு அனைத்து ஊராட்சிகளையும் இணைத்து அதிவேக அலைகற்றை வழங்கும் திட்டமாகும். இத்திட்டத்தினை ரூ.1815.31 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்து ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள 12,525 ஊராட்சிகளுக்கும் குறைந்தபட்சமாக 1 Gbps மேம்படுத்தக்கூடிய அலைக்கற்றை வழங்கப்படும்.

பணி ஆணை வழங்கிய ஓராண்டு காலத்திற்குள் இத்திட்டமானது செயல்படுத்தி முடிக்கப்படும். இத்திட்டம் நான்கு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு செயல்படுத்தப்படும்.

| தொகுப்பின் பெயர் | வட்டாரங்களின் எண்ணிக்கை | கிராம பஞ்சாயத்துகளின் எண்ணிக்கை | கண்ணாடி இழை கம்பி வடம் உயர்மட்ட கம்பத்தின் வழியாக (கிலோ மீட்டரில்) | கண்ணாடி இழை கம்பி வடம் நிலத்தடி வழியாக (கிலோ மீட்டரில்) |
|---|---|---|---|---|
| A | 75 | 3,095 | 11,906 | 1,591 |
| B | 94 | 3,001 | 9,615 | 1,570 |
| C | 110 | 3,326 | 11,335 | 1,486 |
| D | 109 | 3,103 | 10,148 | 1,849 |
| **மொத்தம்** | **388** | **12,525** | **43,004** | **6,496** |

## 2. தமிழ்நெட்

பாரத்நெட் திட்டத்துடன் கூடுதலாக, தமிழ்நெட் எனும் திட்டம் மூலம் மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பயன்பெறும் வகையில், அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் மற்றும் மாவட்ட தலைமையிடங்களை கண்ணாடி இழை கம்பிவடம் மூலம் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. பாரத்நெட் திட்டத்தின் பயன்கள்

பாரத்நெட் உள்கட்டமைப்பின் மூலம் கிராமப்புறங்களுக்கு குறைந்த விலையில் மின்–கல்வி (e–Education), தொலைமருத்துவம் (Tele–Medicine), ஒரே இணைப்பில் மூன்று சேவைகள் – தொலைக்காட்சி, தொலைபேசி மற்றும் இணையதள சேவைகள் (Triple Play Services) ஆகிய டிஜிட்டல் சேவைகளை வழங்க இயலும். அரசு அலுவலகங்கள், பொது நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் அதிவேக அலைக்கற்றையைப் பயன்படுத்தி, அரசின் பொதுமக்களுக்கான சேவையை கிராம அளவில் வழங்க இத்திட்டம் வழிவகுக்கும். இத்திட்டமானது, கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு மற்றும் சேவைகளை ஏற்படுத்துவதன் மூலம், சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.

# அத்தியாயம் – VI

## தமிழ் இணையக் கல்விக்கழகம்

### 1. முன்னுரை

தமிழ் இணையக் கல்விக்கழகம் (த.இ.க) தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–இன் கீழ் தமிழ் இணையப் பல்கலைக்கழகமாக (த.இ.ப.) நிறுவப்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் இயங்கி வருகிறது. தமிழ் இணையப் பல்கலைக்கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகமாக 2010–ஆம் ஆண்டு ஜூலை 16–ஆம் நாள் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முக்கியமான குறிக்கோள் தமிழ்க் கல்வியை இணையம் மூலம் புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு அளிப்பது மற்றும் கணினித் தமிழை மேம்படுத்தலாகும்.

## 2. நோக்கங்கள்

- ❖ கணினித் தமிழை மேம்படுத்துதல்.
- ❖ தமிழர் பண்பாடு மற்றும் நாகரிகம் பற்றிய தகவல்களை உலகம் முழுவதும் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும், மற்றவர்களுக்கும் அளித்தல்.
- ❖ தமிழ் மொழியில் சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டயம் மற்றும் பட்டம் போன்ற கல்வித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
- ❖ தமிழ் மின்நூலகம் மற்றும் பண்பாட்டு மின்களஞ்சியத்தை நிர்வகித்தல்.
- ❖ அனைத்துப் பொருளடக்கத்தையும் www.tamilvu.org இணையதளம் மூலம் அளித்தல்.

## 3. கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் மழலைக் கல்வி, சான்றிதழ்க் கல்வி, மேற்சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், மற்றும் தமிழியலில்

இளங்கலைப் பட்டம் முதலான கல்வித் திட்டங்கள் அளிக்கப்படுகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:

மழலைக் கல்வி என்பது இளஞ்சிறார்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ்க் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன :

- அடிப்படைநிலை (1 மற்றும் 2–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- இடைநிலை (3 மற்றும் 4–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- மேல்நிலை (5 மற்றும் 6–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 9,015 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மேற்சான்றிதழ்க் கல்வி பின்வரும் மூன்று நிலைகளில் வழங்கப்படுகின்றன :

- நிலை 1 (7 மற்றும் 8–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 2 (9 மற்றும் 10–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)
- நிலை 3 (11 மற்றும் 12–ஆம் வகுப்புகளுக்கு இணையானது)

இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை மொத்தம் 876 மாணவர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இளங்கலைப் பட்டம் (தமிழியல்) பாடத்திட்டத்தில் பட்டயம், மேற்பட்டயம் மற்றும் பட்டம் முதலான நிலைகள் உள்ளன. இக்கல்வித் திட்டத்தின் வாயிலாக இதுவரை தேர்ச்சி பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :

- ❖ பட்டயப்படிப்பு – 1,591
- ❖ மேற்பட்டயப்படிப்பு – 1,107
- ❖ பட்டப்படிப்பு – 773

மேற்குறிப்பிட்ட திட்டங்கள் 22 நாடுகளில் அமைந்துள்ள 110 தொடர்பு மையங்களின் மூலமாக வழங்கப்படுகின்றன.

**4. தமிழ் – மின்நூலகம் (Tamil Digital Library)**

மின்நூலகம் உருவாக்குவதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முழுவதும் பயன்படுத்தப்பட்டது. மேலும், டாக்டர் உ.வே.சா. நூலகம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் உள்ள ஓலைச்சுவடிகளை மின்னுருவாக்கம் மற்றும் நூலடைவு செய்வதற்கு ரூ.1.05 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் இணையக்கல்விக் கழகம் மின்நூலக இணையதளம் (https://www.tamildigitallibrary.in) ஒன்றை உருவாக்கியுள்ளது. இம்மின்நூலகத்தில் 16–ஆம் நூற்றாண்டு முதல், இலக்கியம், சமயம், வரலாறு,

மருத்துவம் மற்றும் அறிவியல் போன்ற பொருண்மைகளைக் கொண்ட அரிய நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் ஓலைச்சுவடிகள் வெளியிடப்பட்டுள்ளன. இது தெற்காசிய மொழிகளில் தமிழுக்கான மிகப்பெரிய மின்நூலகமாகத் திகழ்கிறது. இதுவரையில், 35,629 நூல்கள், பருவ வெளியீடுகள் மற்றும் 7,68,097 ஓலைச்சுவடிப் பக்கங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்த இணையதளத்தால் 1,45,06,345 பயனர்கள் பயனடைந்துள்ளனர்.

**5. தமிழர் தகவலாற்றுப்படை**

தொல்லியல், வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் பண்பாட்டுத் தடயங்களை உள்ளடக்கிய ஒளிப் படங்களைக் கொண்ட தமிழர் தகவலாற்றுப்படை (https://www.tagavalaatruppadai.in) என்ற இணையதளத்தை தமிழ் இணையக் கல்விக் கழகம் உருவாக்கியுள்ளது.

இந்தக் கலாச்சாரக் களஞ்சியமானது சிற்பங்கள், கல்வெட்டுகள், கோயில்கள், நாணயங்கள், அகழாய்வுகள், செப்பேடுகளுக்கான தகவல்கள் மற்றும் ஒளிப்படங்களை வழங்குகின்றது.

இந்த இணையதளத்தை இதுவரை 11,12,087 நபர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

## 6. இ – ஆசிரியர் திட்டம்

தமிழ் இணையக் கல்விக்கழகம், உலகம் முழுவதும் வாழும் தமிழ் மக்களுக்கு இணையம் மூலம் தமிழ்க்கல்வியை வழங்கி வருகிறது. இ–ஆசிரியர் என்னும் திட்டத்தின் மூலம் முப்பரிமாண அசைவூட்டப் படங்கள், மெய்நிகர்ப் பலகை, மெய்நிகர் உண்மை போன்ற நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றைக் கொண்ட ஒருங்கிணைந்த கற்றல்தளம் வடிவமைக்கப் படவுள்ளது.

### 7. தமிழ் கணினியம்

தமிழ் கணினியம், தமிழ் மொழியை கணினிகள் புரிந்து கொள்ள உதவுகிறது. தமிழ் இணையக் கல்வி கழகம் தற்போது படச்செயலாக்கம், ஒளி எழுத்துணரி, கணினி மொழியியல் குறித்த பயன்பாடுகள், தமிழ் மென்பொருள் கருவிகள் உருவாக்கம் ஆகியவற்றினை செயல்படுத்தி வருகிறது. மேலும், சொற்றொடர் அமைப்பு, கட்டமைப்புகள், விதிமுறைகள், இலக்கண சரிபார்ப்புக் கருவி மற்றும் பேச்சு செயலாக்கக் கருவி ஆகியவற்றுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### 8. தமிழ் ஒருங்குறி (Unicode)

தமிழ் இணையக் கல்விக்கழகம், அமெரிக்காவிலுள்ள ஒருங்குறி சேர்த்தியத்தில் (Unicode Consortium) நிறுவன உறுப்பினராக உள்ளது. இதன் மூலம் தமிழ்மொழியின் அனைத்து எழுத்துகள், பழைய தமிழ்ச்சின்னம் மற்றும் பின்னக் குறியீடுகள்,

தமிழ் வட்டெழுத்துகள் போன்றவற்றை ஒருங்குறி சேர்த்தியத்தின் தரவு தளத்தில் சேர்க்க முடிகிறது.

## 9. பரப்புரைப் பணிகள்

### 9.1 கணித்தமிழ்ப் பேரவை

கணித்தமிழ்ப் பேரவை என்பது கணினித்தமிழ் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும். அதன்படி, இதுவரையில் தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் கணித்தமிழ்ப் பேரவையின் 200 மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

### 9.2 கான் கல்விக்கழகக் கல்விக் காணொலிகளைத் தமிழாக்கம் செய்தல்

"கான் அகாடமி" என்ற நிறுவனம் கல்வி சார்ந்த காணொலிகளை கணிதம், அறிவியல், வரலாறு, கலை, மானிடவியல், பொருளாதாரம், நிதி போன்ற துறைகளில் ஆங்கிலத்தில் உருவாக்கியுள்ளது. இக்காணொலிகளைத் தமிழ் இணையக்

கல்விக்கழகமானது பேரளவில் பயன்படுத்தும் நோக்கில் தமிழாக்கம் செய்துள்ளது. இதுவரை 4000–க்கும் மேற்பட்ட காணொலிகள் தமிழ்க்குரல் மற்றும் துணைத்தலைப்புகளுடன் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 10. மாதாந்திர தொடர்ச் சொற்பொழிவு

தமிழர் பாரம்பரியம், கலை, நாகரிகம் போன்றவற்றை ஊக்குவிக்கும் வகையில், முனைவர் அவ்வை நடராசன், முனைவர் மயில்சாமி அண்ணாதுரை, முனைவர் ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப, (ஓய்வு) முனைவர் நாகசாமி மற்றும் திரு. திருப்பூர் கிருஷ்ணன் போன்ற அறிஞர்களைக் கொண்டு மாதாந்திர தொடர்ச் சொற்பொழிவுகளை தமிழ் இணையக் கல்விக்கழகம் நடத்தி வருகிறது. இதுவரை 56 சொற்பொழிவுகள் நடத்தப்பட்டுள்ளன.

## 11. மாநாடுகள் மற்றும் இணையக் கருத்தரங்குகள்

### 11.1 ஆசிரியர் திறன் மேம்பாட்டு இணையவழிப் பயிலரங்கம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் முன்முயற்சியாக "நவீன காலத் தமிழ்க் கணினியின் வளர்ச்சியும் அதன் புதிய நுட்பங்களும்" என்ற பொருண்மையில் ஆசிரியர் திறன் மேம்பாட்டு இணையவழிப் பயிலரங்கம் ஆகஸ்ட் 2020–இல் ஏழு நாட்கள் நடத்தப்பட்டது. இதில், சுமார் 800 பேர் பங்கேற்றனர்.

### 11.2 பன்னாட்டு இணையவழிப் பயிலரங்கம் – தமிழ் மொழியில் தொழில்நுட்பங்கள்

"தமிழ் மொழியில் தொழில்நுட்பங்கள்" என்னும் தலைப்பில் ஒரு வார பன்னாட்டு இணையவழிப் பயிலரங்கம் அக்டோபர் 2020–இல் நடத்தப்பட்டது. இது போன்ற பயிலரங்கங்கள் இனிவரும் காலங்களில் தொடர்ந்து நடத்தப்படும்.

## 11.3. பேச்சுப் போட்டி

தமிழ் இணையக் கல்விக்கழகம் அயல்நாட்டில் பயிலும் மாணவர்களின் தமிழ்மொழித் திறன்களை வெளிக் கொணர்வதற்கு ஏதுவாக, காணொலிப் பேச்சுப் போட்டிகளை நடத்திவருகிறது. கடந்த வருடம் டிசம்பர் 2020–இல் நடத்தப்பட்ட போட்டியில் பல நாடுகளில் பயிலும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் 31 மாணவர்கள் பங்கேற்றனர்.

## 11.4. கணினித் தமிழ் – பன்னாட்டு மாநாடு

கணினித் தமிழில் மாணவர்களின் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், மார்ச் 2021–இல் "கணினித் தமிழ் வளர்ச்சியும், சவால்களும்" என்ற தலைப்பில் இரண்டு நாள் பன்னாட்டு மாநாடு நடைபெற்றது.

## அத்தியாயம்–VII

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT)

### 1. முன்னுரை

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT) என்பது தமிழக அரசால் 2009–ஆம் ஆண்டில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் அமைக்கப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்பாகும். ICTACT–இன் நோக்கம் உயர்கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், குறிப்பாக 2 மற்றும் 3–ஆம் நிலை நகரங்களில் பல்வேறு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிப்பதாகும்.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் "ஏழு தூண்கள் அணுகுமுறை"யைக் கடைப்பிடிக்கிறது. இதன் ஏழு தூண்களாவன – ஆசிரியர் திறன் மேம்பாடு, மாணவர் திறன் மேம்பாடு, தொழில் முனைவோர் மேம்பாடு,

இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல், டிஜிட்டல் அதிகாரமளித்தல், தொழில்–நிறுவனத் தொடர்பு, ஆராய்ச்சி மற்றும் ஆய்விதழ் வெளியீடுகள் ஆகியவை ஆகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கொண்ட தன்னாட்சி குழு மூலம் நிர்வகிக்கப்படுகிறது.

## 2. தமிழ்நாடு ஐ.சி.டி அகாடமியின் செயல்பாடுகள்

தமிழ்நாடு ஐசிடி அகாடமியின் 2020–2021–ஆம் ஆண்டிற்கான முக்கிய செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் பின்வருமாறு :

### 2.1 ஆசிரியர் மேம்பாடு

91 உயர்கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழகத்தில் நடத்தப்பட்டு, அதன் மூலம் 2,239 உயர்கல்வி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

## 2.2 திறன் மேம்பாடு

தமிழகத்தின் கிராமப்புறக் கல்லூரிகளில் இருந்து 7,578 பட்டதாரி மாணவர்களுக்கு அவர்களின் வேலைவாய்ப்பினை மேம்படுத்த ஐசிடி அகாடமியால் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.3 தொழில் முனைவோர் மேம்பாடு

தமிழகம் முழுவதும் 243 கல்லூரிகளைச் சேர்ந்த 76,733 மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில், 568 தொழில் முனைவோர் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன.

## 2.4 இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் (Youth Empowerment)

- லேனத்தான் (Learnathons) – கல்லூரி மாணவர்களுக்கு சுயமாகக் கற்றல் பழக்கத்தை வளர்ப்பதற்கு ஏதுவாக, "நியூ இந்தியா லேனத்தான் 2020" (New India Learnathon 2020) நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் 1,25,818

மாணவர்கள் பங்கேற்று 2,84,881 ஆன்லைன் படிப்புகளை முடித்துள்ளனர்.

- முதலாம் ஆண்டு கல்லூரி மாணவர்களுக்காக பிரத்தியேகமாக நடத்தப்பட்ட "ஸ்கில்எட்ஜ்" (SkillEdge) என்னும் புதிய திட்டத்தில், 19,534 மாணவர்கள் பங்கேற்றனர்.
- கோவிட்–19 பெருந்தொற்று காரணமாக கல்லூரிகள் மூடப்பட்ட சூழ்நிலையில், மாணவர்களுக்கு, தொழில்துறை சார்ந்த நிபுணர்களுடன் கலந்துரையாடி வகுப்பறைக்குச் சென்று கல்வி கற்க இயலாத நிலையை ஈடுகட்டும் விதத்தில் GET–SET–GO எனும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 59,873 முதலாமாண்டு கல்லூரி மாணவர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.5 ஆய்விதழ்கள்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் தற்போது 6 சக

மதிப்பாய்வு செய்யப்பட்ட சர்வதேச ஆராய்ச்சி ஆய்விதழ்களை காலாண்டு அடிப்படையில் வெளியிட்டு வருகிறது. 2020–21 ஆம் ஆண்டில், 188 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இந்த ஆய்விதழ்கள் பல்வேறு சர்வதேச தரவுத்தளங்களில் குறியிடப்பட்டுள்ளன.

- ஐசிடிஏசிடி (ICTACT) தகவல் தொழில்நுட்ப ஆய்விதழ் (IJCT)
- ஐசிடிஏசிடி (ICTACT) ஒளிப்பேழை மற்றும் காட்சி ஒளிப்பேழை ஆய்விதழ் (IJIVP)
- ஐசிடிஏசிடி (ICTACT) மென்கணினி ஆய்விதழ் (IJSC)
- ஐசிடிஏசிடி (ICTACT) நுண்மின்னணுவியல் ஆய்விதழ் (IJME)
- ஐசிடிஏசிடி (ICTACT) மேலாண்மை ஆய்வுசார் ஆய்விதழ் (IJMS)

மேலும், தரவு அறிவியல் மற்றும் இயந்திரக் கற்றலின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், 2020–ஆம் ஆண்டு முதல் "தரவு அறிவியல் மற்றும் இயந்திரக் கற்றல் குறித்த ஐசிடிஏசிடி ஜர்னல் (IJDSML)" என்ற பெயரில் ஒரு புதிய ஆய்விதழை அறிமுகப்படுத்தியுள்ளது.

## 2.6 டிஜிட்டல் அதிகாரமளித்தல் (Digital Empowerment)

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் மத்திய அரசின் திட்டமான பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்க்ஷார்த்தா அபியான் (PMGDISHA) திட்டத்தின் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் முகமையாக உள்ளது. 2020–21–ஆம் ஆண்டுகளில் 14,79,812 நபர்களை டிஜிட்டல் கல்வியறிவில் சோதித்து, சான்றிதழ் வழங்கியுள்ளது.

## 2.7 குளோபல் டெக்னாலஜி ஃபோரம்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம், தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து வருடந்தோறும் "குளோபல் டெக்னாலஜி ஃபோரம்" (Global Technology Forum) என்ற மாநாட்டை நடத்தி வருகிறது. புதுமை மற்றும் தொழில்நுட்பம் குறித்த ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இந்த மெய்நிகர் மாநாட்டில், பல தொழில்களில் பல்வேறு உலகளாவிய நிபுணர்களைக் கொண்டு தொழில்நுட்ப அறிமுகவுரைகள், முக்கிய அமர்வுகள் மற்றும் பயிற்சி அமர்வுகள் ஆகியவை இடம் பெறும்.

குளோபல் டெக்னாலஜி ஃபோரம்–2020 மாநாடு ஐந்து நாட்கள் நடைபெற்றது. இதில், 51 முக்கியப் பேச்சாளர்கள், 21 சர்வதேச பேச்சாளர்கள் பங்கேற்றனர். 10 ஆழ்நிலைத் தொழில்நுட்பப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில்

300–க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப ஆராய்ச்சி விளக்கக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

**2.8 ஸ்கை கேம்பஸ் – கல்வியாளர்களுக்கான டிஜிட்டல் அறிவு இணையவழிக் கருத்தரங்குகள்**

கோவிட்–19 பெருந்தொற்றினால் ஏற்பட்ட இடர்களை எதிர்கொள்ளும் வகையில், தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICTACT), ஆசிரியர்களுக்கான டிஜிட்டல் அறிவு இணையவழிக் கருத்தரங்குகளை, தொடர்புடைய பல்வேறு தலைப்புகளில், தொழில் நிபுணர் அமர்வுகளுடன் அதன் ஸ்கை கேம்பஸ் தளத்தின் மூலம் அறிமுகப்படுத்தி நடத்தியது. 51 அமர்வுகளில், 8 பருவங்களில் நடத்தப்பட்ட இத்தொடரில் 1,91,023 கல்வியாளர்கள், 86 சிறந்த பேச்சாளர்களின் சிறப்புரைகளின் மூலம் பயனடைந்தனர்.

## அத்தியாயம்–VIII

### முடிவுரை

மக்களுக்குத் தூய்மையான நிர்வாகத்தை வழங்குவதும், தகவல் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களில் தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றுவதுமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய நோக்கமாகும். பங்கேற்கும் முறையில் அமைந்த, தரவுகளின் அடிப்படையிலான நிர்வாகத்தை செயல்படுத்துவதன் மூலமும், பொதுமக்களுக்கு விரைவான சேவைகளை வழங்குவதன் மூலமும் இந்த நோக்கம் நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு முதலமைச்சரின் ஒட்டுமொத்த வழிகாட்டுதலின் கீழும், வருங்காலத்திற்கான ஆலோசனைக் குழுவின் (Advisory Council for Future) அறிவுரையின்படியும் இத்துறையின் குறிக்கோள் எட்டப்படும். தமிழகத்தின் வளங்களை மேம்படுத்தி தகவல் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும்

தொழில்நுட்ப நிறுவனங்களின் முதலீட்டினைத் தமிழகத்திற்கு ஈர்க்கும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இது, தமிழ்நாடு திறன்வாய்ந்த நன்மைகள் பெறவும், நீடித்த பொருளாதார வளர்ச்சியை அடையவும் மற்றும் தமிழக இளைஞர்களுக்கான உயர்தர வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்.

**த. மனோ தங்கராஜ்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**




**ஃபோர்ட் மோட்டார்ஸ், சோழிங்கநல்லூர்**



**விப்ரோ, சோழிங்கநல்லூர்**



**காக்னிசன்ட் டெக்னாலஜி சொலுஷன்ஸ், சோழிங்கநல்லூர்**



**எச்.சி.எல், சோழிங்கநல்லூர்**



**டெக் மஹிந்திரா, சோழிங்கநல்லூர்**




**டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட், கோயம்புத்தூர்**




**விப்ரோ, கோயம்புத்தூர்**




**எல்கோசெஸ் - இலந்தைக்குளம், மதுரை**



**எல்கோசெஸ்- வடபழஞ்சி, மதுரை**



**எல்கோசெஸ்- நவல்பட்டு, திருச்சிராப்பள்ளி**




**எல்கோசெஸ் - கங்கைகொண்டான், திருநெல்வேலி**



**எல்கோசெஸ் - கங்கைகொண்டான், திருநெல்வேலி**




எல்கோசெஸ் - ஜாகீர் அம்மாபாளையம், சேலம்




எல்கோசெஸ் - விஸ்வநாதபுரம், ஓசூர்




**கண்புரை பரிசோதனைக்கு இ-பார்வை (e-paarvai) பயன்பாட்டைப் பயன்படுத்தும் சுகாதார ஊழியர்கள்**





**இன சான்றிதழை திறன்மிகு உரையாடலை (chatbot) பயன்படுத்திப் பெறலாம்**




**பாதிக்கப்பட்ட விளைபயிர்களை உழவன் செயலியில் பதிவேற்றம் செய்தல் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வழியே நிபுணர்களிடம் இருந்து தீர்வு காணுதல்**





**குறுஞ்செய்தி வாயிலாக தீர்வுகளைப் பெறும் விவசாயி**




கல்விப் பாடத்திட்டங்கள் 22 நாடுகளில் உள்ள 110 தொடர்பு மையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன



**தமிழர் தகவலாற்றுப்படை இணையப் பக்கம்**




**கூகுள் பகுப்பாய்வு தரவுகள்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.